உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞான பௌதிகம்.

இதனுள்

நாற்பதாம் வருட நம்பி கணம்ப

நடன விலாசமும்

அடங்கியிருக்கின்றன

இஃது

சிவநேசச் செல்வர்கள் விருப்பத்தின்படி

ஸ்ரீ சிவசமயத்திற்குத் தொண்டுபூண்டொழுகும்

அடியார்களில் ஒருவனும்

வேதாந்த சித்தாந்த சமரச சுஞ்ஞான விலாச

சபாப்ரசங்க கோளரியும்

சென்னைத் திருமயிலை வடகூர் இராயப்பேட்டை

அருட்கவி

கி. ஊ. பா. கங்காதர நாவலரென் றியற்பெயரமைந்துள்ள

"சிவஞானப்பரதேசியாரென்னும்"

சிவப்ரகாச தேசிக சுவாமிகளால்

இயற்றப்பட்டு

கையொப்பக்காரர்கள் நன்முயற்சியினால் தமது

சென்னை சேத்துப்பேடு,

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

40-வது ஷூத்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5020க்குச்

சரியான சித்தார்த்திஷூ பங்குனிமீ 20உ

சுவாமிசந்நிதியில் தேசிக சுவாமிகளால்

அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1920ஷூ ஏப்ரல்மீ 1உ:

2- JUL MA



44
294551

3

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

179184

2- JUL 1920
MADRAS.

R23'38'211
N20

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞானபௌதிகம்.

விநாயகர் வணக்கம்.

துவாதசமணிமாலை.

§

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருமருவும் பரம்பொருளை தெய்வமணிச் சுடர்க்கொழுந்தை தேவ தேவை
கருமருவு மிருவினையாங் கடல்கடக்க வருட்சுரந்து காக்க வல்ல
அருமருவி யுருமருவு மைங்கரனைக் கணபதியை யன்புசெய்து
தருமருவு மயிலையண்ணற் சிவஞான பௌதிகச்சீர் சாற்றிவாழ்வாம். (க)

கதியெனவந் தடைந்துசதா துதிசாற்றி மதிவிளங்குங் கருத்து ளோர்முன்
பதியெனவந் தருளீந்து நலமருளி விக்கினங்கட் பற்று வண்ண
நிதியெனூஉ நித்தியாப ரோட்சநிலை யதிற்குலவு நிமலன் ருளைத்
ததியெனவே மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றிவாழ்வாம் (உ)

உம்பரர்க்கு மிம்பரர்க்கு முள்ளமெனு மெய்வனத்தி லுதித்து ஞான
சம்பிரம ஞானமணங் கமழநின்ற வறிவதனிற் றழைக்கு முண்மை
யெம்பரனு மோம்சிவ கணேசனென வந்தருளு மிபத்தை போற்றி
சம்போதிரு மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றிவாழ்வாம். (ங)

அற்புதமா யெங்ஙணுமே நிலவுகின்ற மறைபொருளை யகண்டாதீத
சிற்பரமா யுற்பவமுங் கற்பனையு மில்லாத திவ்ய போக
நற்பரமா யளவில்லா நாயக விநாயகனை நமஸ்கரித்து
தற்பரமா மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (ச)

ஆயனவன் றலையைந்தி லொன்றைக் கிள்ளி கையேந்தி யடியர் முன்னந்
தூயமுடன் சாரிவரு குங்கபா லீசன்மகிழ் தொந்தி தன்னை
மாயன்பணு வுருமாற்றி முன்சாழ லதையளித்த வள்ளல் பூந்தாள்
தாயகமாய் மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (ரு)

மயலெனுஉ மும்மலத்தைக் கெடுத்தவர்க ளெஞ்ஞான்றும் வருந்தி யேத்த
கயமுகனு யெழுந்தருளித் தானென்ற வசுரனுக்குக் காலனுகி
ஜெயமருளி நடம்புரிந்த சித்திவிநா யகனடியைச் சேவை செய்து
தயைசெயுஉம் மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம்.

கமகமெனப் பூவெடுத்து சாத்து செய்து கனிவுகொண்டு கவிகட்பாடி
அமர்ந்துவொரு நெறிபிடித்து வைம்பூத வசடுகளை யகற்றிப் போட்டு
நிமலநினை நிகரிலையென் றேத்தினர்க ளுரைஞான நிட்டை கூடி
தமனியமா மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (எ)

எங்குநிரஞ் சனமாய் நிராதார நிட்களமா யிலகு நாதன்
மங்கையெனுஞ் சித்திபுத்தி யவைகளினுற் சகலநன்மை வழங்குவித்து
துங்கநெறி யருளுகின்ற சுமுகனை விநாயகனைத் தோத் தரித்து
தங்குபுகழ் மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (அ)

புங்கவர்க ளெனுமஹனி யர்களுக்கு வந்நாளிற் புதுமை காட்டி
திங்களென வொளிகிளறும் பரமவுரு வதுகாந்துத் திகழு மெய்மை
யிங்கிதமா யருட்செய்த விக்கவிநா யகன்கழலை யேத்தி போற்றி
சங்கரனு மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (கூ)

அரஹரவோம் சிவகணேச நமவெனவே திருவெண்ணீ றணிந்த பேர்க்கு
வரந்தந்து கடைக்கணித்து காத்தருள் விநாயகனை மாதவத்தோர்
சரணடைய நலம்பணித்த தந்திமுக யெந்தையடி சார்ந்து நின்று
தரணிபணி மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (ய)

மாட்சிமையோ டன்புலவு மெய்யடியா ருள்ளமதில் மன்னும் பூர்ண
ஆட்சியெனு மூலவொளி யதிற் களிக்கு முழுமுதலை யறிவிடத்து
காட்சிமிகுஞ் சோதிபரம் பொருளான கணேசனடி கருத்தில் வைத்து
சாட்சியென மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். ()

சென்னை-600 005.

பந்தமலி யஞ்ஞானக் கடற்கடந்து பிறவியது பலுகிடாது
சிந்தையதைத் தெளிவித்து சின்மயமாய் நிற்குநிலைத் தெரிவித் தாளுந்
தந்தையெனுங் கணபதி விநாயகனின் றிருவடியைச் சரணங் கொண்டு
சந்ததமு மயிலையண்ணற் சிவஞான பௌதிகசீர் சாற்றி வாழ்வாம். (௰உ)

—‡—

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

நூல்.

மாமஹேஸ்வர ஹரவோம் மணிமாலை.

சோடசம். இருபஃது நான்குசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் – நட்டராகம்.

திருமணிகட் கலகலென பாதமதி லோதையெழத்
திகழ்நடனம் புரியும்பதியே
செஞ்சடா டவியனே செக்கர்வே ணியனேபல
தேவர்தொழுகு மதீதனே
தினகரோ தயனெனவே வொளிகிளற வுலகெலாஞ்
சேவைசெய வரும்பரமனே
தீயபவ மாயவழி யோயந லுபாயமதைத்
தெரியசொலு நாளெந்நாளோ ?
குருமணியே குணங்கொண்டு மணமுண்ட மெய்யடியார்
குறையிலா சகலவரமுங்

குவலய மெலாம்பணிய வனுபவித்து நினதரிய
குரைகழலுக் கருகராகி
கொண்டாடி யெண்டிசையுஞ் செயசெயவென் றேத்தியே
கும்பிடுந் தெய்வமாகக்
கோதற்று சூதற்று வாதற்று நின்றநிலைக்
கொடியனே னுணரவெளிதோ?
அருமணியே வகிலாண்ட கோடிக ளனைத்தினுக்
காதார மாகிநின்ற
வையனே மெய்யனே வாய்தர்களி னுளமதைவிட்
டகலாத பரம்சொரூபா
அதுவிதுவென் றிடவுஞ்சில ரெதுயெதுவென் றிடபலரா
ளாக்ரமித் திடும்புலியென
வையகோ யெதிருக்த சாத்திர போராட்டமிட
வவைகளி லெவைக்குமெட்டா
மருமணியே மயமணியே விலையிலா மாணிக்க
மானவுரு வானசிவ
மதிமன்ன துதியின்ன கதிசொன்ன பதியென்னும்
வள்ளலே கபாலீசனே!
மங்கையொடு திங்களுங் கங்கையது தங்குபுகழ்
மாமஹா தேவதேவ
மாமஹேஸ் வராஹரவோம் மாமஹேஸ் வராஹரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (க)

தொழுதெழுஉ மெய்யன்ப ருளஞ்சிறிது மகலாத
சுத்தனே சுயம்பிரகாச
சோதியே யாவுக்கு மாதியே சொல்லரிய
சூட்சாதி சூட்சமுடிவே
துய்யநெறி வுய்யுமுறை வையமிசை செய்பவர்கள்
தொல்லையனுக் கெவரோசொலாய்?
சுந்தர வரூபமே மந்திர சொரூபமே
சூக்மசை தங்யமுடிவே
பழுதுடைய யென்புதோ னரம்புதிர மச்சையுட்
பட்டதச காடிமற்றும்
பகருமுடி வானதொண் ணூற்ரூறு தத்துவப்
பங்கிலுட் பட்டுநைந்து

படும்பாடு யிடோடு கொடுவோடு சுடுகாடு
பற்றினவர்க் கணக்குள்ளதோ?
பங்காளி யையவராற் றங்காது சுழல்கின்றப்
பரிதாபம் பார்ப்பதென்கொல்?
அழுதழுது கண்கணீர்ப் பெருககசிந் தேத்தியு
னம்புயப் பாதமலரை
யனுதினமு மறவாது யன்னையிடம் பிறவாது
னருள்வருகும் வழிக்குழைக்கு
மன்பென்ப தொருசிறிது மின்றியலை பேதையென
வகற்றுவது தன்மமோசொலாய்
யரஹர மஹாதேவ தேவனென் றளவிலா
வடியர்தொழக் கருணைகொண்டு
மழுமானு மரவமுங் கொக்கிற குடன்கொன்றை
மலர்கமழ நந்திமீது
வலம்வந்து நலந்தந்து சலனசஞ் சலமகல
வாழ்வுதர வருகும்பரனே
மயிலென வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ் வாஹராவோம் மாமஹேஸ் வாஹராவோம்
மாமஹேஸ்வர வோம்மணியே. (உ)

அங்கென்று மிங்கென்று மூங்கென்று சிங்கென்று
வகலாத வங்மங்கென்று
மட்சரமா மந்திரத்தை யெந்திரத் தினிலமைத்
ததனுட் பந்தனப்படுத்தி
ஆட்டுவது மயிலாசைக் கூட்டுவது முருபோட்டு
வதன்வழியை காட்டுவதெனி
லளவிலா மறைமுனிவ ராப்தர் மஹனியர்சித்த
ரானசிவ முத்தர்பத்தர்
அங்கத்தை யொடுக்கியு மாசைகள் வெறுத்துலக
வாபாச கோபபாப
வகங்காரப் பேய்தன்னை யடக்கியொரு மூலையி
லன்னமா காரமின்றி
அனைத்தையு மொருபொருளா யெண்ணி துதி பண்ணிதவ
மந்தரங் கத்தில்செய்து

அறிவோடு வறிவாகி யதனுட்குண் டலிசத்தி
யருண்ஞானப் பாலைமாந்தி
தங்கமதைப் புடம்போட மாற்றதிக மேலாகுந்
தன்மைபோல் திருவருணிலைத்
தாவிசுகம் பாவித்து ஆவிசமு காமற்படி
சத்துவ சமாதியென்னுந்
தகைமையாற் சடமழியா வகையதுகை வந்தநாள்
தானேதா னுவதல்லாற்
சகலரை மயக்கிபொய் வேடமிட் டுண்பதிற்
சகசநிட்டை வந்திடுமோ?
மங்காத பேரின்ப வாழ்வடைய வேண்டிலுன்
மலரடியை மறவாமலும்
மதகரிபோ லெகிறிகுதி வலியவை யடங்காது
வாய்ப்பதென சொல்வரெவர்காண்
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே
மாமஹேஸ்வர ஹரவோம் மாமஹேஸ்வர ஹரவோம்
மாமஹேஸ்வர வோம்மணியே. (அ)

எண்ணரிய பலகோடி சனனமது வந்துவந்
திவணுளமுப் பாசவழியி
லின்னபடி யின்னவழி யின்னநிலை யின்னமுடி
வென்பதொரு சிறிதுஞ்சொல்ல
யிடமின்றி திடன்குன்றி மடமொன்றி கடனன்றி
யேக்கத்தி னேக்கமுற்று
யென்னென்ன வோகொடியச் செயல்களுக் காளாகி
யேதமிகு பேதைவாதைப்
பண்ணுவதும் பலவழியி னண்ணுவதும் பூர்வவினைப்
பற்றுவது முற்றுபெற்றுப்
பார்ப்பது மவாவெகுளி அச்சம் நாணம்வாய்மைப்
பலியாது நீக்கிநிற்கும்
பணிசெய்து துணிபுய்த்து விதிவைது கதிவரும்
பக்தியதிலே நிலைத்துன்
பாததா மரைதொழுஞ் சாதனையை யருளாது
பராமுகம தாவதென்சொலாய்?

அண்ணலே வாருயிரே யன்னை தந்தை குருதெய்வ
மரசன்மனை மக்கட்சுற்ற
மனுபவித் திடவருஞ் சுகாசுக மனைத்துநீ
யல்லாது வேறொன்றுளதோ ?
அகரமது முதலெழுத் தாகநிற் பதுபோல
வமலனே சகலசீவர்க்
காதார மாகநில விடவருஞ் சிதானந்த
வையனே செவிசாய்த்தருள்
மண்ணுண்ட வாயனெனு மாயன்கண் வைத்துதொழ
மன்னுவரந் தந்தசிவமே !
மாசற்ற குணமுடனே நேசமுற் றவர்கள்தினம்
வாழ்த்தவரு மாதித்தனே
மயிலெனு வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ் வாஹாரவோம் மாமஹேஸ் வாஹாரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௪)

ஆதரை யெலாம்பணிகொ ளகண்டிதா காவடிவே
யாவுக்கு முதற்பொருளென
வளவிலா சொச்சொரூப சுகசொரூப மாகியயெ
ஞண்டவா ஆண்டவைகளே
அவையவைக் கேற்றவுரு கொண்டுபிரா ணனுடற்கு
ளடங்கியே யாட்டிகாட்டு
மந்தரங் கந்தன்னை யறிந்தவரே நின துருவி
ன திமகிமைக் கண்டுபோற்றி
வேதமாகவுஞ் சிலது போதமாகவுஞ் சுருதி
மிக்கமஹா வாக்கியமோக்கிய
விஞ்சைமலி புராணயிதி காசகாண் டங்களுடன்
விதிமதி யிரண்டுமின்றி
மேலான சரிதைமுத லாமுடிவின் ஞானமய
விபரசித் தாந்தநிலையை
விளக்கவைத் ததினுண்மை தெரிந்தாலுங் குருவிலா
வித்தையது முத்திதருகுஞ்
சாதனை யானதுவந்து கைக்கூடன் பொய்யலோ
சாற்றிடினும் மாற்றமாகும்

தகத்தகா யச்சோதித் தன்னைபார்த் திட்டபின்
சார்வதற் கானவேறு
தற்சொரூப மோட்டதற் கேற்றவே றிலக்கணந்
தழையிலட் சணமுண்டுமோ ?
மாதவர்க ளோதரிய பாதநிழ லாதரவாய்
வணங்குந்திற மருள்வதெந்நாள் ?
வையாளிக் கிரையாக மறையாது வரந்தந்தால்
மாபுண்ணியஞ் சொலவேண்டுமோ ?
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ் வாஹாவோம் மாமஹேஸ் வாஹாவோம்
மாமஹேஸ் வாவோம்மணியே. (௫)

பந்தமெனும் படுகுழிய தெனுநரகப் பேய்வாயுட்
பட்டுநலம் விட்டுகெட்டு
பற்றுமிகு சுற்றமதி லுற்றவினை யதைதொட்டு
படாதயிமி சைக்காளாகி
பாபியா னிடுக்கணுற் றிடகண்டு மையனே
பரிதாப மென்பாலிலையேற்
பாரில்வே றியாருளார் பகருமொழி பொய்யதோ ?
பட்சம்வைத் தாதரித்துன்
மைந்தனென கைதூக்கி யாண்டிடிற் குறைசெய
வலியரிவ னுண்டுமோசொலாய் ?
மகத்துவ மெலாமுனது வசமோயென் வசமுளவோ
வசனிக்க வகையேதுகாண்
மாரூத யின்பமே வழங்குமா னந்தமே
வாதுசெய் வோர்க்குயெட்டா
மாதேவ தேவனே மனவாட்டை பலியாக
வழங்கினோர்க் கிறையேதுரையே
சுந்த்ரஜோ பிதமேமறை சொல்லரிய மெய்ஞ்ஞானச்
சோதியே சுகாரம்பமே
தொம்பத மதைத்தாண்டி தொய்தபத மதன்முடிவாய்த்
துலங்குஞ் சுழுச்சிகலையிற்
றோன்றவரு நித்யாப ரோட்சசுவ்ஷ் கிதசுபிக்ஷ
சுத்தசை தந்யபெருமைச்

சூழ்கின்ற வெம்மானே பெம்மானே யுனதருளாற்
றொல்லையதி னீங்கவருள்வாய்
மந்தமதி யினனென்று கைவிடில் தவிப்பனியான்
மறுத்துசொல வேண்டியததோ?
வஞ்சகனுன் செஞ்சரணந் தஞ்சந்தா கெஞ்சினேன்
மனதுள வறிந்தபரனே!
மயிலேன் வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ் வாஹாவோம் மாமஹேஸ் வாஹாவோம்
மாமஹேஸ்வா வோம்மணியே. (௬)

மெய்கொண்டு மெய்யுணர்ந்த மெய்யர்முன் மெய்யனுய்
விளங்கவர் ததும்பொய்யோ?
வித்தாகி விளைவாகி விளையுந்திற மும்பயன்
விடுபடா தருளுகின்ற
விமலனே வமலனே வேதாந்த சித்தாந்த
விஞ்சைக் குகந்தவடிவே
விட்டது வினைவந்து தொட்டது யெனசொலி
வீண்கடை பரப்பிவிழலாய்
துய்யநெறி யதைவிட்டு மையலுட் பட்டுலக
சூதாகும் பொய்யைநட்டு
சூர்யன்முன் பனிநிற்கு மெனமன கர்வங்கொண்டு
துகளதைப் புகலடைந்து
சோங்கேறி யிரவுபக லொழியாதக் கவலையைத்
துணைக்கொண்டு வாடனல்லதோ?
சுத்தசித் தத்தினட மெத்ததியு நத்திசெயுஞ்
சுயம்பிரகாசச் சொரூபமே!
பையுளப் பாம்புநிக ராகசொல் லெனும்பல்லது
பட்டவுட னஷ்டஞ்செய்யும்
பாபிபரி தாபமுகம் பார்க்காது நீக்கிவிடின்
பகரவொரு மொழியுண்டுமோ?
பரமவபி தானமே பாங்குளமெய் தானமே
பணிநிலவு மெய்ஞ்ஞானமே
பாசமுட னுசஞ்செய் தவேசமுள தேசன்வந்து
பற்றுமுன் கழலருளுவாய்

வையமிசை பொய்யுளையி னையும்படி செய்துவிடின்
மாற்றியெனைக் காப்பவரெவர்
மாசிலாப் பரஞ்சுடரே! வணங்கினோர்க் கிலையிடரே
வரவேண்டு மிதுசமயமே
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ்வர ஹரவோம் மாமஹேஸ்வர ஹரவோம்
மாமஹேஸ்வர வோம்மணியே. (எ)

கானவன் வலைப்பட்ட மான்பகிர் துயர்போலுங்
கணவனை யிழந்தமங்கைக்
கண்கலக் கத்துடன் வாதைபடு நிலைபோலுங்
கறவதனை யற்றவலையுங்
கன்றதனைப் போலவுங் கண்கெட் டலைந்திடுங்
கபோதியந் தகன்போலவுங்
கைப்பொரு டனைத்தோர்த்து கையேந்தி யேநின்ற
கன்மந் தனைப்போலவும்
ஊனுற் கொழுத்தவுட லதிலுள்ள வைவர்செய்யு
மொட்டார மதைப்போலவு
முள்ளதனைக் கண்முன்னே மறைத்து பொய்யானதை
வுறுதிபடுத் திடுவன்போலு
மூமையவன் கண்டகன வதைப்போலவும் பலோர்க்
கோடிவோடித் தன்பஞ்சே
யுலுத்தரிற் றலைமையன் போலவு மாலைவாய்க்
குட்பட்ட கரும்பைப்போலுந்
தேனது யிருக்ககசங் குடிப்பவர்கட் போலவுந்
தெய்வவழி பாடுவிட்டு
தீக்கருமந் தனக்குவெச மானனாய்த் தலையாட்டித்
திரிந்தலையு மலகைபோலுந்
தேசிக ரெனுங்குரு மூர்த்திசொ லதற்கிடர்
செப்பிமகிழ் மூடன்போலுந்
தேசமெல் லாமோடி பாபமாஞ் சுமையதைச்
சிரமேத்தித் திரிவன்போலும்
வானவர்கட் சுகம்விட்டு தானவனாய்ச் சனனமுற்று
வாதைபட் டயரல்போலும்

வன்மமலி கன்மத்தின் சுழல்காற்றி லலையுமெனை
　　மன்னித்திங் காளவேண்டும்
மயிலேனை வுமாதேவி வணக்குந்திரு மயிலைவளர்
　　வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ் வராஹரவோம் மாமஹேஸ் வராஹரவோம்
　　மாமஹேஸ் வரவோம்மணியே. (அ)

எல்லாரு நல்லவர்க ளுள்ளமதை நத்தஞ்செய்
　　திறைஞ்சிசதா போற்றியென்று
மெப்பொருளு மெவ்வுயிரு மிறைவனீ யல்லாது
　　மில்லையெனு நம்பிக்கைகொண்
டோர்த்தவழியினுக் காளாகி மகிழ்வெய்தி
　　பின்னடருங் கொன்னலுக்கு
மிடந்தராப் படிசத்திய நெறிநின்ற தாலலோ
　　யிமையவர் வாழ்வடைந்தார்
பொல்லாதவனுனதுப் பொன்னடியை நினையாது
　　பொத்தலுளப் பொய்யுடற்கு
போசன மளிப்பதும் வாசனைத் தெளிப்பதும்
　　போர்வையால் மறைத்துக்கொளலும்
புத்தியது போனவழி சிக்குண் டலைவதும்
　　பொருளல்லா தவற்றினைமெய்ப்
பொருளாகக் கொண்டுமலை வுற்றுழலலே சனன
　　போகமதிற் சிறந்ததெனவும்
கல்லான ததிலேநா ருரிப்பவரை நிகராக
　　கன்மசிர்தைக் காளாகி
காலன்வரு நாளதிலே வோலமிட் டழுவதிலென்
　　கார்யமிலை யென்றயெண்ணி
கஞ்சமலர் விஞ்சைபத மெஞ்ஞான்று மஞ்சருகோள்
　　கடையேனை விழிசாய்த்திடாய்
காரண சருவபரி பூரண னந்தமே
　　கைவிடின் மிகதவிப்பேன்
வல்லாண்மைக் கொண்டவனென் றெள்ளாது தள்ளாது
　　மனம்வைத்து வாதரிக்கு
மாதாவு நீபெற்ற தாதாவு நீசருவ
　　மகிமைக ணிறைந்தசிவமே!

மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ் வாஹாரவோம் மாமஹேஸ் வாஹாரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௬)

ஏகலை போகனே யெங்கணு நிறைந்துநட
மியற்றுஞ்சச்சி தானந்தமே
யெப்பொருட் குந்தலைமை யுடையசிதா காஸமே
யிறப்புடன் பிறப்பிலானே
எவ்வுயிரி னுளுந்தழைத் திருப்பவனே மஹானிய
ரிருதயக் கமலமதில்வா
ழீசனே கைலாசனே யிணையிலா விலாசனே
யேதமிலார் மனவாசனே
ஆகமங் கைவிட்ட பாவியெனை நிகருலகி
லியாருளா ரொருவருமிலை
அனியாய மனியாய மனியாய மனியாய
மையகோ யெனதுவிதியை
அகற்றியே வாதரித் தஞ்சாதே மகனேயென
வருகே வழைத்துநன்மை
யருளுபவனே கருணை யதுபூத்தவா நினது
அன்பினைத் தடுக்கவசமோ ?
தேகமதிற் சிவனாய் குடிகொண்டு வளவிலாத்
திருவிளை யாடற்செயுமுன்
சிந்தையதை யுந்தனரு ளன்றிபொய் மாய்கையிற்
றெரியவல் லவர்களுளரோ ?
சித்தருடன் முத்தரும் பத்தரு மெத்ததியுஞ்
சேவைசெய் திடுந்தெய்வமே
தினகரோ தயமென வொளிதிகழுஞ் சின்மய
சிற்பரதத் துவசொரூபமே
வாகைபெற மஹானியர்கள் வந்தனம் புரிந்துள
மகிழவரு மானந்தமே
மலைமதையர்க் கெட்டாத மாணிக்க சோதியே
வரையறுக் காதமறையே
மயிலென வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே

மாமஹேஸ் வரஹரவோம் மாமஹேஸ் வரஹரவோம்
மாமஹேஸ்வர வோம்மணியே. (௰)

பரமசந் தோஷமே பாக்கிய மெலாந்தந்து
பாதுகார்த் திடும்பிர்மமே
பகரரியப் பிரணவ பஞ்சாக்கர சொரூப
பருணித விலாசமன்னும்
பாஸ்கர சுபாஜித சுபிஷலட் சணமருவும்
பண்ணவா பக்தர்நேயா
பணியினிற் கனகமா யொளிதிகழு மெய்ஞ்ஞான
பானுவே வுயர்தாணுவே
அரஹரவோம் நமசிவய நமவோம்சிவ நமசிவய
அருண்மண மலக்குமலரே
ஆசித்து யெஞ்ஞான்றும் பூசித் துபாசித்து
அபிடேக வாராதனை
அன்புகொண் டேசெய்து சிரஞ்சாய்த்து கரங்கூப்பி
அருணிறைவெண் ணீறணிந்து
வமலனே நிமலனே ஆதரித் தருள்கவென
அஞ்சலிசெய் மெய்த்தொண்டர்கள்
விரதமிகும் பக்திக்கு வுள்ளமது பூரித்து
வேண்டிய வரங்களீவோய்
விஞ்சைதருங் குஞ்சித பாதநிழ லதைக்கண்டால்
வினையெலாம் பொடியாகுமே
வேதாந்த சித்தாந்த நாதாந்த நாயக
விகிர்தனே செக்கர்வேணி
வித்திலா விளைவான சத்துசித் தானந்த
விழுமித ரகஸ்யப்பொருளே
வரமிகு மாதவர்கட் சாதனையுட் பொலியவரு
மன்னுஞ்சிதா காஸவெளியே
மச்சமென ரகுநந்தன் கொண்டகிலே மாற்றிட
வணங்கிதொழுங் கங்கைவேணி
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ்வா ஹரவோம் மாமஹேஸ்வா ஹரவோம்
மாமஹேஸ்வா வோம்மணியே. (௰௧)

சின்மயா னந்தமே தேடருஞ் சிலாக்கியமே
செழுமறை நிறைவாக்கியமே
தேனெனவே யடியவர் தனக்குள் ருசித்திடுந்
தீங்கனியே தெள்ளமிர்தமே
திவ்யபரஞ் சுடராகி யெத்திசை தனக்குவொளி
திகழவரு ஞானபாநு
தேவர்க்கு மூவர்க்குந் தெரிவரிய பரமாகுஞ்
சிற்பரதற் பரனேவினைகள்
முன்னஞ்செய் தப்படி வழாது வன்னையின்கரு
முதிர்ந்து யீரைந்துமாத
முடிவாகப் படிமீது சடமாக யிடங்கொண்டு
முறைபடி சனித்துவூழின்
முகிலெனும் பனிவரையு மூடின விதங்கன்மம்
மூண்டெழுந் துலகவேட்கை
முனந்தோன்றி மாயையது வீறமெய் வாய்கண்செவி
மூக்குடன் பொறிகளைந்து
தன்னுடைய வாசனையைப் போலநன்மைத் தீமை
தனையனுபவித் திறுதியிற்
றள்ளாமை வந்திட கண்ணுக்கோர் கண்ணாடி
தடியூன்றி நடைநடக்க
சந்தோஷங் கொண்டமனை மக்களுடன் சுற்றஞ்
சலிப்புற்றுக் கிழவனென்று
சாற்றியழைத் திடும்வரை வைத்திருப் பதிலென்ன
தன்மமென்பதை யறிந்திலேன்
மன்னுமெய்ஞ் ஞானியர்கள் வாழ்த்தியே தொழுஞ்சந்திர
மௌலியே பரமசூக்ம
வாச்சல்ய கெம்பீர சுத்தசுகா ரம்பமே
வரவேண்டு மிதுநேரமே
மயிலென் வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ் வராஹரவோம் மாமஹேஸ் வராஹரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௰௨)

தலைவனெனு மரசனிலா நகரமுங் குடிபோலுஞ்
சற்குரு விலாமாணவன்

றனைப்போலு மன்பிலான் றவம்பக்தி யோகமுந்
தானமில்லான் செல்வமும்
தளகர்த்த னில்லாதப் படைகளு மாசாரமிலான்
றனதுமந்திர பூசையுஞ்
சாந்தமில் லாதவன் செய்கின்ற நிட்டையுந்
தன்னையறியான் கல்வியும்
சிலைபோ லொடுக்கமிலான் சிந்தையு மைம்பூதச்
சேட்டையை யடக்கமுடியான்
செய்கின்ற விரதமுந் தெய்வபய மில்லாத
தீயர்களுடன்செய் யுறவுங்
செகமாய்கை செகமாய்கை செகமாய்கை யெனச்சொல்லி
சிறிதுந்துறவான் வண்மையுந்
திறமாக மறம்பேசி நல்லோரைப் பெரியோரைச்
சேர்ந்துலவு வோன்மோசமும்
வலையில்படு மீனென வஞ்சிக்கும் பொல்லாரின்
வாக்கிலெழு தந்திரமொழியும்
வனத்தினிற் காய்ந்திட்ட நிலவும் பட்டிமாட்டை
வாங்கினவன் படும்பாடதும்
மாறுதப் பொய்சொலி யெல்லவர்க் குங்கெடுதி
வழங்குவோன் கள்ளசெயலும்
மரியாதை வணக்கமதை முதற்காட்டி யிறுதியில்
மதியாது மதயானைபோல்
மலைவுற்று நிலையற்று கலைமுற்று மரிந்தான்போல்
வாயாடி தனத்தில்மிஞ்சி
வலியவுற வாடிகொடுஞ் செயலுடையோன் செய்கையென
மாதவர்கள் வேதமொழியே
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ் வாஹரவோம் மாமஹேஸ் வாஹரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௧௩)

அருள்மன்னு மாப்தர்களி னடியிணை சேவைய
தகப்படுவ தருமையெனல்போ
லத்துவித முத்திநிலை யாருஞ்சித் தாந்தநெறி
யவையடைத லருமையருமை

யாமென்ப ரறிவுடைய ராதல்போ லன்புகொண்
டந்தரங்கப் பூசையை
யாற்றலு நோற்றலுங் கூற்றன ணுகா மூனடிக்
காளாக நிற்பதரிதாய்த்
தெருள்மன்னும் பெரியோர்கட் குருக்களும் விவேகமதிற்
சிறந்தவர்க ளுரையுமெனல்போற்
சிந்தையை யடக்கலும் நிந்தையை யொடுக்கலுஞ்
செப்பரிய கீர்த்தியழியா
தேகத்தைக் கொண்டவர்க் கன்றோ பூர்வபுண்யஞ்
சேர்ந்துவந் தவைகொடுக்கும்
தீண்டிய வுடன்கொல்லு நஞ்சுடையப் பாம்புநிகர்
செடமுடையோர் நலமென்றருவார்
பொருள்மன்னும் பேருடைய ரெல்லவரு மடக்கமுடன்
பொறுமையெனு மாபரணமே
பூண்டுவான் டனுபவித் தளவிலா தானதன்மம்
பொருந்திநல் லவர்க்கீதலே
போதுமிதுவே சிவப் பணியில்மே லானதெப்
பொருளையுந் தருகுமண்ணல்
புகன்றசை வாகமத் துள்ளபுதைப் பொன்னெனப்
போற்றிசைப் பதுயிலாது
மருள்மன்னு மாயையைத் தாமூட்டும் பாலதை
வாயார மாந்துமாக்கள்
வண்ணமிடி கொடியபிடி படிநொடி விடாதென்றும்
வஞ்சகுண மகலக்கண்பார்
மயிலென வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே!
மாமஹேஸ் வரஹரவோம் மாமஹேஸ் வரஹரவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௧௪)

காரணம் பொன்னுகக் காரியம் நகையாகக்
கலந்துசொலித் திடுமுறைமையைக்
கற்றவர்க ணற்றவமே யுற்றதெனப் பற்றிமனக்
காடதைச் சீர்ப்படுத்தி
கருணைமிகு மருண்மாரி தனைப்பாய்ச்சி சத்தியமெனுங்
கனிதருகு ஞானவிதையைக்

காலத்தோ டிட்டபெயி ராக்கியறுப் பறுத்துண்ண
கன்மமது தலைக்காட்டுமோ
பூரணா னந்தசுட ரதையணுகி லிருவினைகட்
போகும்வழி தெரிவதில்லை
போக்குவர வற்றநிலைப் பொருந்திடி லுலகெலாம்
போற்றும்வர மதுவந்தணுகும்
போராட்ட வஞ்ஞான மாருட்ட முதலளவிற்
பொல்லாத செடிகொடிமுடிப்
பொடிபடுந் தீமுன்னம் பஞ்சென யெரிந்துபோம்
பொய்யென மறுப்பவரெவர் ?
ஆரணஞ் சொல்லுநெறிக் காட்பட்ட பெரியோர்க
ளறிந்தாசை கொண்டுசொன்னா
னாலு மிதனுண்மை கண்டுவிசு வாசமுட
னுசித்தோர்ப் பயனடைந்தார்
அறிவிலா மிருகநிக ரலைந்தலைந் தோரிடத்து
மடங்கிபசி யாற்றலின்றி
அகங்காரப் பேய்ப்பிடித் தாட்டிடநற் குணமற்று
லையோநான் கண்டபயனென் ?
மாரணத் திசையதை மாதவத் தினரன்றி
மற்றவர்கள் வெல்லலெளிதோ ?
வந்த சனனத்திலே பந்தமற் றந்தனடி
மருவதலைச் செயின்மாபுண்ணியம்
மஞ்ஞையா யுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ்வர ஹரவோம் மாமஹேஸ்வர ஹரவோம்
மாமஹேஸ்வர வோம்மணியே. (௰௫)

சாகினி யெலாமெனது வசமாகினு மென்ன
கடக்கபோய் நின்றுமென்ன
கருவி கரணச்சேட்டை யொடுங்கிடு முறைகற்ற
காலத்தி லன்றோநன்மைக்
கைவருகு மப்போது சிவஞானப் பாலதைக்
கருணைவிழி யதனைச்சாய்த்து
கற்பக வல்லித்தாயார்க் கொடுக்கவருந் திருநெல்லைக்
கான்முலையென் றாவணைத்து

யீசனே ஞானமன வாசனே கைலாசனேவு
னிணையடிக் கருகனுக்கி
பினிப் பிறவாத்தன்மை யருளினு லல்லவோ
யெளியேன் பிழைத்துபோவேன் ?
என்றாலு மரிதரிது மாவரிது அரிதரிது
யெவரிதைத் தரவல்லவ
ரெங்கோடினும் பயனென் பதுசிறிது முண்டுமோ
யிவைகளுன்முன் மறைவனதோ ?
ஆசரித் திரவுபக லாகவுழைத் தவையெலா
மந்தகோ பொய்வெறும்பொய்
யானுலு மலவழீங்கித் தனியாகு மோர்கிலே
யருள்வரெவ ருன்னையன்றி
அப்பனீ யன்னைநீ குருதெய்வ மரசன்மனை
யாதிமக்கட் சுற்றமவைநீ
அளவுபடா சுகிதுகி வுண்ணலுறங்கலும் பக்தி
யவைகட் காதாரமவைநீ
மாசற்ற தங்கமே யெனைப்பெற்ற அங்கமே
மறந்திவ ணிருக்கப்பாழாம்
மனதான ததுயெனை மறைக்குதே யவைநீக்கி
மலரடிக் கர்ளாக்குவாய்
மயிலேன் வுமாதேவி வணங்குந்திரு மயிலைவளர்
வள்ளலே கபாலீசனே !
மாமஹேஸ் வாஹூாவோம் மாமஹேஸ் வாஹூாவோம்
மாமஹேஸ் வரவோம்மணியே. (௰சு)

கயிலாச மயிலேசமாலை.

வண்ணச்சந்த பஞ்சதுணித விருத்தம்.

அண்ணமணி வண்ணனெனுங் கண்ணன்றறி வரவிந்தமே
யருளாவிடி னெருபோதுமிக் கடியேனெரு நொடிநின்றிலேன்
பண்ணாரிசை யெண்ணற்கிலாப் பாடல்தனைக் கேடன்சொலிப்
பதமானதைச் சதமாகவே நிதம்போற்றிடு மிதம்பெற்றிலேன்
பெண்ணுனெனும் பேதந்தனிற் பிணைப்பட்டனன் றணையுற்றிடாப்
பேதைப்படு வாதைத்தனை யோதத்தகா தேயத்தனே
கண்ணுயதி னொளியாகவே கலந்தோயுனைக் கலனுக்கியே
கருணைத்தா வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (க)

அதிபோகமே மிகுயோகமே வகிலமெலா முனதாட்சியி
லல்லாதிலை யெல்லாமுன தருளானதே பொருளானது
மதியாதவவ் வவுணர்ப்படை மறையகன்மங் குறையவுன்றன்
மனதாகியே கந்தனெனா மைந்தனைசம் பந்தனென
ததியுற்றிட நிதிபெற்றிட பதியற்புத மதுநத்திட
நந்தாயம்மை வந்தாளவே தந்தாளேபால் சொந்தமுடன்
கதியுற்றவர் துதிகற்றனர் விதியற்றுவச் சிதமுற்றனர்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (உ)

ஆற்றுப்படைச் சாற்றினர்மு னந்நால்வர வுன்னாரெனி
லாரோதெரி வாரோசொலாய்ப் பாரோர்ப்பணி யாரோகணா
மாற்றுக்குறை யாப்பொன்னிலே மணியாயொலி திணியாளனே
வந்தாள்பவ ரெந்தாயுன்போ லெங்குமிலைத் துங்கநிலைச்
சாற்றும்படி நோற்குமடி யேர்க்குத்தரப் பார்த்தாள்விழி
சருவசொரூ பமதானவா தமியேன்மிடித் தமைநீக்கிடாய்
காற்றுடிபோ னிலையற்றலைக் கயவன்மிசை தயைவைத்துநின்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௩)

வஞ்சக்குண படுபாவியின் வாய்ப்பட்டிவ னாய்ப்போலவே
மாயக்கண்ணா னோயுற்றனன் மருந்தானது யருந்தேனலேன்
தஞ்சப்பதங் கெஞ்சுமெனைத் தற்காத்திடும் பொற்றாளருட்
சமயமிது வுமைபாகனே சைவசமயப் புண்ணியமே
பஞ்சானதுத் தீமுன்படும் பாடுற்றந்தோ வாடற்கொண்டேன்
பரிதாபமா னதுமில்லையோ? படிறன்முன்னாள் விழைதொல்லையோ?
கஞ்சனெனும் பிரமன்சிரங் கையேந்திய மெய்யாயுன்றன்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௪)

வெண்ணீறணிந் தெந்நேரமும் விஞ்சைமிகு சஞ்சம்பெற
விமலாதயைச் செய்தாதரி விடமுண்டவா நடங்கொண்டவா
எண்ணாப்படிப் புண்ணாங்கடைக் கண்ணாவியாய்ப் பண்ணுந்தொழி
லெல்லாமொழிந் துல்லாசமாய் நல்லத்துதி சொல்லவருள்
மண்ணானயான் மண்ணாகியே மறையுமுன மிறைவாயுனை
வணக்குமதி யிணங்கும்வித வல்லாய்மொழி சொல்வாய்த்ததி
கண்வைத்தன்று தொழுததினால் கண்ணனெனும் பெயருற்றனன்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௫)

அமரர்களுக் கிடுக்கண்செய்த வசுரரெலா நசுங்குண்டிட
வருடந்தமெய்ப் பெருமானுனை யல்லாரெவர் வல்லாருளார்

சமரசத் தியவந்தனர்த் தனதாத்தும மனக்கோயிலிற்
றாண்டவஞ்செ யாண்டவனே ஆண்டவினைத் தாண்டாவிடி
னமனுனவ னிடரானதா லிகோட்டிற்குட் படுவேனவை
கலமாகுமா நதிகொன்றையு மதிகங்கையு மணிநாதனே
சமழுமல ரதிற்றேனெனக் கலந்தாய்பொல்லாப் புலனைய்ந்திட
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௬)

அருளாளர்க ளுளம்வாழ்ந்திடு மத்தாபரி சுத்தாவன்று
அயனுமரி யுந்தேடிட அண்ணாமலை யெனநின்றவா
திருவம்பலப் பொருளானதுன் செயலின்றிவ ணையமொன்றிலை
செல்வத்தினுட் செல்வஞ்சிவச் செல்வமெனச் சிறந்தோயெனை
ஒருவாப்படி தயைசெய்திடி லொதியேனரகில் வதையேனெலா
வுல்லாசமும் வல்லாண்மைகட் சொல்லாப்படி வொழியுமிவைக்
கருதும்வடி வாயன்பர்முன் கனிந்தேமன மூவந்தாயுன்றன்
கருணைத்தா வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௭)

இனியாகிலு மனம்வைத்தரு ளீவாய்சர்வ தேவாயுனை
யின்றித்துணை யிலையையனே யெல்லாந்தெரி வல்லாய்வினைப்
பனியானதப் பருதிமுனம் பறக்குநிலை சிறக்கவருட்
பரனேநிரா தரனேகிருபா கரனேயுன்றன் சரணண்டினேன்
தனியாய்மன மதுவாய்ந்தொரு சார்புற்றிடு நேருற்றிடேன்
தகையானவோர் வகைதந்திடிற் சகலப்பவம் பகலாய்விடும்
கனியாயதன் சுவையாய்க் கலந்தவனேநலந் தரவித்தி
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௮)

பற்றொன்றிலாப் பரமர்த்துதி பண்ணுமென தண்ணுவுனைப்
பணியவெண்ணி றணியும்படி பார்த்தாள்துயர் தீர்த்தாளுவாய்
சற்றேனுமிவ் வற்பன்றனைத் தள்ளாமலு மெள்ளாமலுந்
தாதாவரு ளுதாமரைப் போதாகுணு தீதாவென
நற்றாமரைப் பொற்பாதமே வற்றாப்படிப் பெற்றார்களே
நல்லாரவர்ப் பொல்லேன்கதி யெல்லாம்பல வுல்லங்கமே
கற்றாய்ந்தவர்க் கருத்தானதிற் கருத்தாவென நிருத்தஞ்செயுங்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௯)

பல்லோர்த்தொழும் பரமானந்தப் பருதியன்பர்த் திருதியெழிற்
பதமானதைச் சதமாயெணுப் பாபித்தனின் சாபமெல்லா
மில்லாப்படி நினைவாயுனை நிகரானவோர்ப் புகலண்டிலே
னேயாதலோர்த் தூயாமாச காயாயெனை யாயாதருட்

பொல்லேன்கலைக் கல்லேனிலைச் செல்லேனுண்மைச் சொல்லாதமாப்
 புலையேன்சிவர்க் கொலையேன்பழித் தலையேன்மாயச் சிலையேனழி
கல்லாகினுங் கரையுமுன்றன் கடைக்கண்கணித் திடவேதயை
 கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௰)

காதாந்தமே நடுநாயக நம்பனுனை நம்பாப்படி
 நாயேன்வெளி பேயேனலைக் காயங்கொண்டு மாயம்பேசி
யாதாரமிங் கில்லாமையா லந்தோவென்றன் சிந்தைநைந்து
 அழுதேனுன்று டொழுதேனென்றம் பழுதேயுளப் புழுதேகத்தைச்
சாதந்தனு லுயிரோம்பியே சாக்காடதில் வேக்காடுகொள்
 சண்டாளனை யண்டாப்படி தடுத்தாலுயிர் விடுப்பேனுண்மை
காதற்கொளு மாதர்ப்போலக் கலியானதா னலிவுற்றிடாக்
 கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௰௧)

உலகானதி லுளயாவுமுன் னுறவன்றியோர்ப் பொருளுண்டுமோ?
 உற்றாரெவர்ப் பெற்றாரெவர்ப் பற்றானதை யற்றாரெவர்க்
கலனுகவந் தடைந்தாரெவர்க் கடந்தாரெவ ரிடைந்தாரெவர்க்
 கலைக்கற்றுமெய் நிலையுற்றுபொய் மலமற்றுவர் பலன்முற்றுமே
நலங்கொண்டுமுத் தலம்விண்டுசேர் நிலங்கண்டுழூழ்ப் புலனொன்றிடா
 நாட்டமுடன் சேட்டையற வேட்கையுட னுட்பட்டிடாக்
கலகப்பய லெனுமைவராற் கண்ணீர்க்கொண்டுப் புண்ணுகினேன்
 கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௰௨)

போருற்றெலாப் பொருட்போனபின் புலம்புங்கதி நிலவாப்படி
 புநிதக்கழ லதைப்போற்றிடும் புத்தியுடன் பத்தியருட்
சீருற்றவு னேருற்றவர் பேர்பெற்றதை யாரற்றனர்
 சிந்தித்துனை வந்தித்திடுஞ் சிறப்பானதை மறவாதுதா
பாருற்றவூழ்ப் பறந்தோடிடும் பறவைநிகர்ப் பறந்தோடக்கண்
 பார்த்தாயெர்த் தீர்த்தாள்முகம் வேர்த்தேன்றதி கார்த்தாட்சரண்
காருற்றவா ணவக்காட்டிடைக் கலங்காவுண்மை நிலைபெற்றிடக்
 கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேச்னே. (௰௩)

புலிவாய்ப்பட்ட வாடாகவும் புழுதீயினிற் படும்பாடெனப்
 பொல்லாவிட முண்டவுயிர்ப் போகுங்கதி யதுவாகவும்
நலிகொண்ட தேகம்போலவு நவிலாலைவாய்க் கரும்பாகவு
 நாசப்படு மோசக்குண நயவஞ்சகர் மயல்பட்டிவ
ணலைகின்றவன் கதிபோலவு மறம்விட்டவன் மறம்போலவும்
 அலையிற்படுந் துரும்பாகவு னறிவற்றவ னெறிபோலவுங்

கலிவாய்ப்பட்ட கயவன்றனின் கன்மமற நன்மைப்பெற
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௰௪)

போற்றுந்தொழி லுடையார்களே பொன்னுடதின் புகழ்க்கொள்ளுவார்
பொய்க்கோலத்தா லுய்யுமெனைப் பொருளாய்க்கொள்வ ரொருவரில்லை
தூற்றுங்குணம் மாற்றாதவர்க் கூற்றனெனச் சாற்றுமொழித்
தொலைவோயிலை கலைகற்றவ ருலகுற்றிட நிலையாக்கினர்
சீற்றங்கொண்டுப் பார்த்தாலேழை செழிப்பதில்லை யொழிவேனோர்நாள்
சிவயநம வெனயேத்தினர் திருமூத்தியி னுறவுற்றனர்
காற்றுக்குப்பி னேருற்றிடக் கருதாப்படி யருளாகியக்
கருணைத்தர வரவேண்டினேன் கயிலாசமா மயிலேசனே. (௰௫)

திருவிழிசாய்க்க சிந்தைசெய்மாலை.

துவாதசம், சோடசக் கழிநெடி லாசிரிய விருத்தம்.

பண் - நட்டராகம்.

—)§(—

அண்டபகி ரண்டநவ கண்டமுட னனைத்து
மமர்ந்துநடம் புரிந்துவர மருளும் புராதனனே
அசரசர பேதமு மபேதகுணம் பொருந்தி
அம்மையப்பன் குருதெய்வ மரசன்மனை மக்கள்
பிண்டமுள வுருகரந்துப் பிறந்துசுகா சுகத்திற்
பிணைப்பட்டலையேழையெங்ஙன் பேசுவேனுன் நிறத்தை
பிரணவ பஞ்சாக்கரத்து ணிறைந்துலவு மகிமைப்
பேசுவர்கள் மாசற்று தேசுற்ற நேசர்களே
கண்டவைக ளியாவினுளுங் கலந்தப்பெருந் தகையே
காணுமுளக் கண்ணுடையார்க் கண்டுகளிப் படைவர்
காண்கிலான் கண்டதெனக் கதைசொலிலென் பயன்காண்
கண்டவர்கண் விண்டிலராய்க் கணித்தார் முன்னோர்கள்
செண்டாடு நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௧)

மெய்யழியா மெய்யுணர்ந்து மெய்மையதற் குழைத்து
மெய்கண்ட தேவர்களே விஞ்சைதேக முடையார்

மித்தைதரூ ழனித்தியமிகுஞ் சித்து வித்தைகளில்
மென்மேலும் விருப்பமுளா ரென்னறிவார் முடிவில்
செய்வதொன்று சிந்தையொன்று செப்புவதொன் றுனூற்
றெரியார்க ளுளரென்று யெண்ணுவதுஞ் சான்றும்
தீபட்டு யெரிவதிலே நெய்யதனை வார்த்தாற்
சில்லென்ப துளதெனவே செப்புவரியா ருலகில்
கையிலுள ததைப்பார்க்க கண்ணாடி வேண்டுவரேல்
கண்மூடி தனமென்ற்கு சாட்சியங் கேட்பதுயேன்
கலையைவிரித் தாடுமயி னிகரென வானகோழிக்
கருதிடுநேர்ப் பெரியவர்முன் சிறியவர் செய்வதுவே
தெய்வீக நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௨)

புகழ்படைத்த மெய்யடியார்ப் போற்றுந் திவாகரனே
புரந்தரனே சிவஞான போதத்தெழும் பொருளே
பொய்யகன்ற மெய்யுரைத்துப் புனிதநிலை யடைந்த
புண்ணியர்க ளுளமகலா வண்ணலே பெம்மானே
இகபர சாதனைக்கேற்ற மதியும் வாழ்வருளு
மிறைவனே சுகாசம்ப பெரும்பயனே ஹரனே
எள்ளினுட் டயிலமென யிலகுஞ்சுவஸ் திதனே
செவ்வுயிர்க டனக்குஞ்சிவ ஞானநிறை பவனே
சுகதுக்க மிவையிரண்டு மொன்றெனவே நினையுந்
தூயகுண முடையநல்லோ ரஞ்சலிசெய் பரனே
சொல்லரிய மாயைவழிக் காட்பட்டலை யாநற்
சுத்தநெறி சித்தமுற வத்தனே பத்தியருள்
திகழ்கின்ற நந்தியெனு மால்விடையின் மீது
செழுவுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௩)

கதியெனவந் தடைந்துதொண்டர் பணிசெய்வதற் குகந்து
காட்சியுடன் மாட்சிமைதந் தாண்ட பெருமானே
கங்கையனே மங்கையுடன் திங்களணிந் தவனே
கையின்மான் மழுவுடனே பிரமன்சிர மேந்தி

துதிபுரிவார் முனந்தோன்றி வேண்டியவாழ் வளித்த
சுயம்புவே சம்புவேவோம் துரியாதீதச் சுழுச்சித்
துலங்குமுடி வாங்குண்டலி சத்திதரு மமுர்தந்
துகளறவே யருந்திவரும் பிறவிகடற் றாண்டி
சதிசெயூஉங் கன்மவூழ் வலியின்றலை யுடைத்துத்
தானென்ற வாண்மையுள மனத்தின்வலி யொடுக்கி
சங்கற்ப வாசனைக ளகன்று சிதாகாஸந்
தனிநின்று யெனைமறந்து யுனையறிந்து வாழ்குந்
திதிநிலவு நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பகவல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் றிருவிழிசாய்த் தருளே. (ச)

சங்கரவோம் சச்சித சதானந்த சாட்சியனே
சந்திரசே கரனேசதா சிவமேதவத் தினர்கட்
சந்ததமும் வந்தனைசெய் சிந்தையி லுவந்தாட்
சாஸ்விதனே சாத்திரமெலாஞ் சாற்றுமூலவடிவே
அங்குளது யிங்கிலையென் றாற்றுபவர்க் கண்மு
னகப்படாப் படிசருவ வுயிர்களினு நிறைந்து
அவரவர்செய் கன்மதன்மப் படிநன்மையுந் தீமை
யருளுகின்ற வுளவதனை யறிவது லேசல்லவே?
தங்காது யிழுத்திழுத்து வலக்கழிர்துக் கொல்லுஞ்
சண்டாளக் குணமுடைய தீயநெறிக் காளாய்த்
தான்படைத்தா யெனிலெவர்காண் தடுக்கவல்லா ரறியேன்
சத்துசித்தா னந்தமெனத் தழைக்குமகண் டிதனே
செங்கணுள நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லீமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் றிருவிழிசாய்த் தருளே. (ரு)

கருணைமன்னும் பரஞ்சுடரே காரண காரியங்கட்
கடந்தவர்க ளெஞ்ஞான்றுங் கருதுஞானப் பிழம்பே
காலமெனுங் காலனவன் கோலஞ்செயு நாளைக்
காணுமலழிவில்லா வரமுடையப் பெரியோர்ப்
பெரும்பயனை மூவாசைப் பகட்டிவிருட் பகடாய்ப்
பின்றிரிந்து சகலநல மிழந்துவேட்கை மிகுந்து

பெண்வேடந் தரித்துலவும் பேடியென நிலவும்
பேதையர்கட் சூததற்கு வாதரவாய்த் தூதாய்
மருட்கொண்டு மாயையிலக ரடுத்தவரைக் கெடுக்கு
மனிதரிற்பை சாசகுணம் படைத்துழலா நல்லோர்
வாசகவிஸ் வாசகமெய் நேசவுப தேசம்
வாய்த்திடினே பூர்வவினை யாவுமாய்ந் திடுங்காண்?
செருஞலவ நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்க்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் றிருவிழிசாய்த் தருளே. (சு)

மாசில்லா மணியேமர கதமே வைடூரியமே
மாணிக்கமே முத்தேநவ ரத்தினமே பவளமே
மங்காத கீர்த்திநிறை வள்ளலே யுள்ளமதை
வசமாக்கி குடியிருந்து வாழ்வுதரு பவனே
காசினியில் மாயைவச மாகாமல் தப்பினவர்
கருவிகர ணங்களிடுக் கண்கடனைக் கடந்தார்
கனமருவும் பொய்வேட வுடுப்பதனை யுடுத்தி
கண்டவர்கட் கண்கடனை மயக்கி தியங்கிடச்செய்
பாசமெனு மாசையினி னேசமுற்றே துயர்க்கொள்
பரிதாபங் கண்டிலையோ ? பார்க்கவுங் கண்ணிலையோ ?
பாரிலுள சிவர்களி லியாளொருவ னல்லவோ ?
பசுபாசங் கடந்தவர்கட் பணியும்பசு பதியே
தேசம்புகழ் நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பகவல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் றிருவிழிசாய்த் தருளே. (எ)

ஒப்புயர் வில்லானேபரஞ் சுடரேசோம சுந்தரா
வோதரிய பலவுருவா யெழுந்தபரத் துவனே
உண்மையுரை திண்ணியரு ளண்ணு மண்ணலேமெய்
யொடுக்குமுறை யடுக்குநிலை படுத்துறங்கி விடுக்கும்
முப்படையை யுறவாக்கித் திறையதனை நீக்கி
முப்பாழுக் கப்பாலாய் மூளைத்திருக்கு முதலை
மூதண்ட கோடிகட்கு மறியவொணாத் தனியை
மூச்சொடுங்கு முனஞ்சேர்ந்து வாழ்ந்திருக்கும் வழியைத்

தெப்பமெனக் கொண்டுஞானச் செல்வ சிவகாமி
தேவியுமை பார்வதிகுண் டலிசத்தியாள் தருகுந்
தீஞ்சுவை நிறையமுதந் தனைப்பருகி சுகிக்குந்
திறமுடனே வாமுதவுந் தெய்வீகசிற் பரமே
செப்பரிய நந்தியெனு மால்விடையின் மீது
திகழுருபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (அ)

அரஹரவோம் சிவயநம வென்வே மனமொடுங்கி
வைம்பூதச் செயலடக்கித் திருவெண்ணீறு பூசி
அக்கமணி மாலையணிந் தைந்தெழுத்தை யோதி
யன்புகொண் டஞ்சலியா யனுட்டிக்குநன் முறைமைத்
திரம்பணித்து திருத்தொண்டர்க் கூட்டமதைச் சேர்ந்து
செயும்பணியிற் சிறிதுமக லாப்படிமெய் யுணர்ந்து
தேசிகராங் குருமூர்த்தி திருவடி விடாது
செழுங்குணம் படைத்துவரு ணிலவுநெறி பிடித்து
சரணடையு மெழிலடைந்து பழிபாவங்க ணசித்து
சமரச சுபாவநிலை யுடனேமுத்தி யெனுமுஞ்
சமாதியெனு மூர்த்தவுரு வாய்த்திடுநா ளலவோ?
சகல கேவலங்கடந்த தென்பர் சதுர்முகனின்
சிரமேந்தி நந்தியெனு மால்விடையின் மீது
திகழுருபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்ந் தருளே. (சு)

மாதவத்திற் சிறந்தவரே மாயக்கட லடைத்து
வாழாரை வாழவைக்கும் வல்லமைகைக் கொண்ட
மகிமையதை யேழைபுத்தி யுடையவனு னுரைக்க
வல்லவனோ? இல்லையில்லை யெனினுமவை முடியா?
கோதகற்றி கோதனைத்துங் குணமேனவே கொள்வார்க்
கூற்றனையும் வென்றிடுவோர்க் கும்பிட்டார் தனக்கு
குறைவில்லா வாழ்வருளிக் குவலயங்கட் புகழுங்
கோவாகி தேவாகி சேவைசெய நிலைப்பார்!
பாதகத்திற் றலைவனெனப் பஞ்சவர்கட் செயலுட்
பட்டுவினைத் தொட்டுநெறி விட்டுபெழி நட்டு

பாவாதீதத் துட்படாப் படிநன்மையைச் சுட்டு
பலகால மிருப்பனெனும் பாவியெங்ங னுணர்வேன்
சீதரனு நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பகவல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௰)

மூவுருவு முத்தொழிலு மும்மூர்த்தி முப்பசையா
மும்மலமு முக்குணமு முச்சுடர் முத்திரையாய்
மொழிகின்ற வழியில்லா மோனஞானப் பொருட்கு
முதன்மையனு நிலவுகின்ற பரனேசிதம் பரனே
ஏவலிடம் பொருளிவைக ளியாவுமே கைவந்து
மின்னலற்று நினதுதொழும் பதைமறவா துளுற்று
மெண்ணமுளப் புண்ணியரே விண்ணவர்நா மேரைவார்
விஞ்சைசபா ரஞ்சிதமெய்க் கொஞ்சுமுமா தேவி
தாயின்று சண்முகர்க்குஞ் சம்பந்தர்க்கு மமுதந்
தான்கொடுத்து களித்தவண்ணஞ் சார்ந்தவடி யவர்க்குத்
தஞ்சமென வருட்சுரந்து காக்குநிலை யென்நாள்?
சமஸ்த ஜீவாதாரப் பொருளெனவே நிறைவோய்
சேவைசெயு நந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௰௧)

வாசிவா சிவாவேனவே வாசியதைக் கட்டி
வல்லவோங் காரபீடத் தமர்ந்து சுழுச்சியதின்
மலைசிகர முடிநடுவி லுடுவெனவந் தடுக்கும்
மாணிக்கப் பாம்பதின்மேற் படுத்து சயனித்து
நாசிமுனை தனில்ரேசித்து பூரித்து கும்பித்து
ணயனமதி லெழுஉந்தண் லதையடக்கி மேலா
ளுட்டத்தின் ஆட்டங்கண்டு வாட்டுமுழைப் போட்டு
நமசிவய வெனுமமுதம் பொசித்துப் பசியாற்றி
ஆசில்லா யிருப்பிடமாம் மூலவெளி யதனி
லதுவதுவா யிருக்குந்தன்மை யடைந்து நித்தியசுகமா
யாப்தர்களும் மஹனியரு முத்தர்சித்தர் பத்த
ராசிக்கு முத்திநிலை யடைவதெந்நா ளுரையாய்?

தேசிகனு கந்தியெனு மால்விடையின் மீது
திகழுறுபான் மூவருடன் திருவள்ளுவ ரேத்த
சீர்கற்பக வல்லிமகிழ் ஸ்ரீகபாலீச் சுரனே!
சிவசிவ மஹாதேவநின் திருவிழிசாய்த் தருளே. (௰உ)

சித்தர் பெத்தர் முத்தரும் பத்தருஞ் சேவைசெய் சிவபிரான் நீயென சிந்தித் தேத்துதல்.

சந்தவிருத்தம்.

மாசிலா மணியே மன்னு ஞானநிலை
வழங்கிடுஞ் சிற்சுக வாரியே
வள்ளலா யெவைக்கு முன்னோ னாகவரு
மகிமை தங்குங் கிருபாகரா
ஏசிலாத பஞ்சாக்கர சொரூப மலி
யிலக்கணத்தை யுப தேசிக்க
யிறைவிதன் மனஞ் செலுத்திடாமற் படி
யெதிரி லுற்றகேதாரந்தன்னை
ஆசிலாதப்படி பார்த்து வாசை கொண்ட
ததனு லவ்வுருவைப் பெற்றமே
அன்பாய்ப் புன்னைமா நிழலி லிங்கமமைத்
தம்மைப் போற்றவவ ணமர்ந்தவா?
தேசிக மூர்த்தமாய் சனகர் நால்வர்க்கன்று
சேவை தந்தசிவ நாதனே
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழும்
திருமயிலை கபாலீசனே. (௧)

மறைக டன்னைக்கள வாடியே வசுரன்
மாயமாய்க்கடலில் விட்ட நாள்
மாயவன் மச்சமா யெடுத்துவந்து தொழ
மகிழ்ந்து நன்வர மளித்தவா!
கறைகனுன சுக்கிரன் மூன்றடிமண் தானங்
காண்கிலாப் பொருமைப் பேயினுற்
கருவண்டாக மன்னன் மாபலிக் கைகர
சரக வாயிலை யடைத்திட

நிறைவிலா ததறிந் தேவவ்வா மனனு
நியமதர்ப் பையினுற் குத்தவே
நிலவுங் கண்ணிழந்து துளமும்லிங்கஞ் செய்து
நிட்டைகொண்ட தேவே பிர்மனைச்
சிறையில் வைத்தசிவ சண்முகனைப் பொரியிற்
செனிப்பித்த மாப்பிர சித்தனே
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௨)

புனலினிற் கனலி லேடிட்டுப் பொன்னுக்கி
புத்த நந்திதலைத் தத்தவும்
புகழ் மலியுஞ்சைவ மெய்ப்பட வாண்பனைப்
பொருந்தி பெண்பனையாய்க் காய்க்கவும்
மனங் கனிந்துதொழும் பாண்டிமா தேவிக்காய்
மன்னவன் கூனை நிமிர்த்தியும்
வணிகனுக் குயிர் கொடுத்து வாழ்வுற
மணமுடித் தெலும்பைப் பாவையாய்த்
தனமிகு மற்புதஞ் செய்யவே கந்தனைக்
காழியிற் சம்பந்த மூர்த்தியாய்க்
ககன மீதருளி தன்ம நோயகற்றங்
காருண்ய வெண்ணீ றளித்தெங்குந்
தினகரோதயமாய் விளங்கச் செய்தமஹா
தேவ தேவசித் விலாசனே
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௩)

தபிலை நந்தன வனத்திற் கண்டபிரு
கன்னியர்களை மணங் கொளுங்
கன்ம தேகங்கொண்டு வாரூரிற் பிறந்து
கருது மேந்தல்பால் வளர்ந்துமே
செயமிகும் வதுவைத் தனில்வந்துத் தடுக்க
திறமிகு மோலையைக் கிழித்துபின்
திருமுணர்ந்து பண்ணி சைத்து காட்சியுடன்
திருத்தொண்டர்த் தொகையைப் பாடியே
வயமிகும் பரவைத் தனைக்கல்யாணங் கொள்ளம்
மனைக்குத் தூதுசென்று செங்கல்லை

மகிழ்கனகமாக்கி குளத்திற் பொன்னெடுத் தோர்
மகனை முதலைவாய்ப் பட்டருளியுந்
தியங்கிட மகிழ மரத்தின் கீழமர்ந்து
திகழ்வதுவை சுந்தரர்க் களித்தவா
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௪)

அழிவிலாத சைவத் தனிற்பிறந்து பெற்றோ
ரதிதனத்தை திருப்பணி செய்து
அமண மார்க்கமதிற் சென்று சூலைநோய்பட்
டங்கமேநொந்து மெலிந்த நாள்
பழிசேர் தேகமுடன் தமக்கையைப் பணிந்து
பாவம் போக்குந்திரு நீறினைப்
பண்பாய்ப் பூசப்பெற்றுக் கூற்றயினை வேனப்
பதிகம் பாடி சுகமாகியே
இழிவுள சமண மழியு மூலமாக
யீந்த கஞ்சுண்டனல் குளிரவு
மியானைக் கும்பிடவுங் கடல் தனைக்கடந்து
மெழிலப்பூதி செல்வன் பண்ணினற்
செழித்துயிர்ப் பெறவுஞ் செய்நாவுக் கரசர்
சேவிதா சருவ சோபிதா
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௫)

மந்திரித்தொழி னடத்து நாள் குதிரை
வாங்கவே கொடுத்த தனத்தினால்
வன்னனுக் காலயஞ் செய்ய வேண்டுமெனு
மகிழ்வு கொண்டு பெருந்துறையினிற்
சுந்தரமாகவே முடித்து போற்ற ஞானச்
சுத்தசைவமெய் சித்தாந்த நூல்
சொல்லவு மெழுத குருவாய் வந்தமர்ந்த
தூய்மையா மகிமைக் காண்பரியார்?
தந்திரமாய் நரிகள் பரிகளாக வைகைத்
தழைக்க பிட்டுக்காய் மண்சுமைத்
தலைபி லேற்றிபின் மறைந்திடப் பாண்டியன்
றந்த வோரடி சேர்க்கெலாஞ்

சிந்தை யாயுறவு முமைப்பெண் பேசவுஞ்
செய்த வாதவூரர் தெய்வமே
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௬)

தில்லைவா ழந்தண ராமூவா யிரவர்த்
தினம் யாகஞ்செய்து பணிந்தவா
திருநீல கண்டமென் றன்னவன் மனைவி
செப்பிய வார்த்தைக்கு பயந்துள
மொல்லை நேரமு மெண்ணிலான் காட்சிகொண்
டுய்யவே பணித்த மெய்யனே
உயரியற் பகையு மிளையான் குடிமாற
னேதுமெய்ப் பொருண் விறன்மிண்டர்
எல்லை யில்லாபத்தி யுடையமர் நீதியும்
எறிபத்தன் ஏனாதி யுடன்கண்ணே
டிறைச்சி தந்து யெதிருற்ற சேசரியு
மேத்திய பூருவ அர்ச்சுனன்
செல்வ ஞானமுடன் காட்சி பெற்றவண்மைத்
திறமுணர்ந்தோதுத லரிதலோ?
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௭)

மக்கட் பட்டினியைப் பொருட்செயாது தூபம்
வழங்கி யேத்துமெண்ணம் மன்னுநாள்
மனைவி தாலியைக் கொடுத்து குங்கிலியம்
வாங்கிப் பூசைசெபம் முடிவுற்றுப்
பக்குவப் படாமற் சாய்ந்த லிங்கமதைப்
பத்தியாம் பூனூலால் நிமிர்த்திட
பாருளோருஞ் சோழ மன்னனுந்திருப்
பணிக் குதவியே வணங்குஞ்சீர்
மிக்குயர் கலயனார் மானக் கஞ்சாரர்
விமலனி னடிசிற் சிந்திட
வேதை கொண்டரி வாளாற் கழுத்தரிய
விஞ்சையார் தரிசனம் பெற்றுத்
திக்கெலாம் புகழும் அரிவாட்ட நாயனார்
சிந்தையாய்ந்த ஞானத் தந்தையே

சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழும்
திருமயிலை கபாலீசனே. (அ)

ஆமெய்த்தும் பஞ்சாக் கரந்தனைக் குழலி
லமைத்துப் பாடிசர்வ வுயிர்கட்கு
மண்டருக்குங் களிப்பெய்த ஆனயர்
அருமுழங்கைத் தேய்த்தச் சந்தனர்
தாமளித் தமனை யழித்து நீறதுவே
தரு மபிடேகம் ருத்ராக்ஷமே
தங்க வாபரணஞ் சடையே கிரீடமாகத்
தானரசு கொண்ட மூர்த்தியார்
நேமமாய் நால்வகைப் பூக்களா லர்ச்சித்த
நியமடி தள்ள முருகனர்
நெறியுடன் சலத்தில் ருத்திர மந்திரமோதி
நிகரிலா உருத்திர பசுபதி
க்ஷேமங் கொள்ளு மஷ்டசித்தியுஞ் சுந்தரர்
சேவைகொள் மீழலைக் குறும்பருஞ்
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (கூ)

அடியவர்க் கமுது வூட்டியே பொய்யா
மமணர் களைக்கழு வேற்றியே
அம்மை மங்கையர்க் கரசி தொண்டினுக்கு
அன்புட னுதவி சம்பந்தர்
அடியிணை யர்ச்சித்த குலச்சிறை நாயனர்
ஆதனூரிற் பிறந் தந்தணர்கள்மூ
வாயிர வர்பதஞ் சலிவியாக்கிரம ரயு
னரியிந்திராதி தேவர் முனிவர்
முடியினல் வணங்கி யரியொணுத ஞான
முத்திசே ரம்பல வாணனர்
மூவுலகந் தொழ தனியைப் போலருந்த
மூர்த்தியாய்க் கலந்த நந்தனர்
செடியுடைச் சமணர் நாணகுள சலத்தாற்
றிருவிளக் கிட்ட நமிநந்தி
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (ய)

ஏகாலி குலத்திற் சனித்து வன்பர்வேஷ்டி
யிதய மகிழ்ந்து துவைத் தீயுநா
ளெதிருற்று வங்கீந்த கந்தையைக் காணுதா
ளெழிற் சிரத்தைக் கல்லிற் புடைக்கவே
ஆகமத்துக்கெரி வரிய காட்சிபெற்ற
வன்பன் திருக்குறிப்புத் தொண்டனுர்
அர்ச்சனைக் கிடுக்கண் செய்த தந்தைக்காலை
யறத் துணித்தசண் டேசுரர்
போகப் பேரின்பந் திடவெழுந்த நலம்
பொருந்தி பத்தாதந்த கனியினுற்
புண்ணியமும் பக்தியும் வந்திட வடியார்ப்
போசன மருந்தி வாழ்த்த வூன்
தேகம் வேண்டாமற்பேய்ச் தேகங்கொண்ட காரைக்கால்
தேவியாம் புனித வதியருந்
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதோழுந்
திருமயிலை கபாலீசனே. (௰௧)

திருநாவுக் கரசர்க் கீர்த்திகள் விளங்குஞ்
சிந்தையாய் மடந் தண்ணீர்ப் பந்தர்
செல்வ ராமொடு வூழியர்க் கப்பெயர்ச்
சிறப்பதைக் கேட்டுவரச் சரியமாய்
வருக நேரிற்கண்டு போசனங் கொள்ள
வருந்திய நாள்மகன் பாம்பினுல்
மடிந்தும் நெஞ்சமது வாடலின்றி யன்னம்
வழங்கப் பதிகத்தா லுயிர்ப்பெரும்
குருவிஸ் வாசமுள அப்பூதியரு நற்
குண லிங்கமேற் சிலம்பியும் விழ
கோதென வாயிணு லூதிய மனைவிமேற்
கோபித்த திருநீல நக்கரும்
தெருளிலா வமணர்க் குருடராகக் கண்கொள்
திருப்பணி செய்தண்டி யடிகளுஞ்
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதோழுந்
திருமயிலை கபாலீசனே. (௰௨)

பரவையின்பாற்றூது செல்ல வைத்தகோபம்
பற்றிரா முழுதுந்தூக்க மின்றியே

பனேந்துன்ப மகற்றி ஸ்நேகஞ் செய்துவைக்க
பணிசூழ் சுந்தரர்க்காய் சூலைகொண்
டாற்றுக வருவ தறிந்துந் தன்கழுத்தை
யரிவா ளாற்கொய்துயிர் மாண்டின்ப
மாம்பத முற்ற கலிக்காமன் பசக்க
ளவைமுன மரித்த மூலனின்
பிரிவை யாற்றாதுயர்க் கொண்ட கோக்களுக்காய்
பெட்புடன் றேகத்துட் புகுந்துசீர்ப்
பெரிதுவக்க வெழுந்து மூவாயிரம் பண்
பேசி வைத்த கைலைச் சித்தரும்
தெரிந்திடாது வந்த ரங்க பக்திசெய்து
சீரடைந்த சாக்கிய புத்தருஞ்
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௰௩)

மாமஹேச்சுரப் பூசையைச் சூதாட்டமதில்
வரும் பொருளைக்கொண் டூற்றியும்
மார்க்க வஞ்சகரைத் தோல்வி யுற்றவரை
வாளாற் கொய்த மூர்க்க நாயனர்
நேமமாக பஞ்சாட் சரஞ்செபித்து சுந்தரர்
நேசங் கொண்ட சோமாசி மாறனர்
நெறிவழா தன்பர்க்கு அடிசிலுந் தனமும்
நிலவத் தந்தசிறப் புலியரும்
பூமலி மைந்தன் சீராளனைச் சமைத்து
போனகத்துட னளித்து சீர்ப்
பொருந்திய முன்சன்ம கர்னனுரு முற்
போத முற்றசிறுத் தொண்டரும்
தேமலராற் பூசை புரியுந் தெய்வகண
தேவனு மசரன் கூற்றுவன்
சித்தர் பேத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௰௪)

பூசையின் மணியி னோசைக் கேட்டிடாமற்
புந்தி நைந்துடை வாளாலுயிர்ப்
போக்க வெண்ணியொலிக் கேட்டும் போற்றிநலம்
பொன் வண்ணத்தந்தாதி நவின்றமே

பாச நீக்குந்திரு நீறென வண்ணான்முற்
  பட்ட வுழவுமண ணாலவன்
    பாதத்தில் விழுந்து கும்பிட்ட சேரமான்
      பரத வர்களதி பதியராய்
ஆசிலாத்தலைமீனதைப் புணரி விடுத்
  தவைபின் வருவநற் பயனுறும்
    அதிபத்தரு முன்ன ரடிமையானேனூற
      அவமதித்த மனைவி கைவெட்டி
தேசுற்ற கலிக்கம்பநும் வெண்ணீறுற்
  செய்யகூனி யிர்ந்த நெடுமாறர்,
    சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
      திருமயிலை கபாலீசனே. (௰௫)

திருவிளக்கு வைக்கும் பணியினால் வறுமை
  சேர்ந் தொலெங்கிகூலி கிடைத்திலாச்
    சிந்தை நைந்தில்லாளை விற்க யெண்ணிடவுந்
      தீண்டிடாக் கவலை மிக்கவே
குருதி தன்னாலெத்த கழுத்தரியும் வேளைக்
  குணங்கொண்டு தடுக்க முத்திகொள்
    கோதிலாக் கலியர் அடியாரை தூஷிக்குங்
      கொடியவர் நாவதைத் துண்டித்திடும்
பெரும்விரத முள்ள சத்தியனார் பல்லவர்
  பேசும் வேத நாசமாகவும்
    பெட்பாய் மைந்தனுக்கு வரசளித்த காட்வர்
      பெரியவன் விளக்கு நெய்யிலா
தெருளுற்று கணம்புல் லுடன்றலை ரோமத்தாற்
  திசமுற்ற கணம் புல்லனார்
    சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
      திருமயிலை கபாலீசனே. (௰௪)

தமிழிற் பாண்டித்திய முடையாராய் மூவேந்தர்த்
  தன்மேற் கோவைப்பாடிப் பொருட்பெற்று
    தரைமேற் கீர்த்திநிலைத் திட சிவாலயங்கட்
      சமைத் தன்பர்க்குதனங் கொடுத்தசீ
ரமர்ந்தகாரியனார் ஆலயமே மனா
  மாக்கி ஞானவிளக் கேற்றிதன்

ஞவியே திருமஞ் சனமென வாட்டிமெய்
யரு ளுருவமேநற் காட்சிகொட்
சமரச மெய்ஞ்ஞான சைவராம் வாயிலார்
தகைசேர்ப் பூசைமலர் மோர்ந்ததைத்
தானறிந்து மூக்கையுங் கையையுந் தறித்த
சதுரித செருத் துணையரும்
திமிரமி லியாக்கையைத் தெழுத்திற்குங் கௌபீனஞ்
சீலத் தந்தநெறி நேசனார்
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௰எ)

இல்லா னெல்லவர்க்கும் பொல்லா னென்னுஞ்சொ
விருப்பினு மவற்றைப் பொருட்செயா
தேழையாகித் தொண்டர்க் கன்னமீயுஞ் செய
விருதயத் திற்றங்க யிரவிலே
நெல்லதைக் களஞ்சி யத்தில் வாரிசெல
நிறை காவலர்க்கண்டு கொடுவோ
நெறியதை ஆழவே யாய்க் தவர்க்குவேண்டு
நிதியு நெல்லுந்தந்த இடங்கழி
நல்ல மன்னனுடன் அடியார் பக்தியதி
ஞட்டமாய் துட்டரை வென்றசீர்
நவில் மூனையடுவார் வறுமை வந்தப்போழ்தும்
நலிந்து தேகவலி குறைந்துமே
செல்வ மன்னுந்திரு மஞ்சன மாட்டியே
சீர்த்தி யுற்ற புகழ்த்துணையரும்
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
திருமயிலை கபாலீசனே. (௰அ)

ஆலயப் பணிக்காய் நெல்லை சேர்த்துவைத்து
அமர்க்கு சென்றவர வவையெலா
மருந்தியே செலவழித்த பெற்றோர் சுற்ற
மருமனைவி மக்க ளனைவரை
ஞாலமீது சைவ பற்று மிக்கவன்னோர்
நமனுலகஞ் செல்ல வாளினால்
கையக் கொன்றசிசு வொன்றுடன் காட்சியை
நல்க யாவர்களு மூத்திசேர்

மூலமாகிய கோட்புலியரும் தேகமே
　முன்னவ னாலய மாக்கியே
　　முறைபடியே மனோ பாவனை கைவந்த
　　　முதல்வன் பூசலார் சம்பந்தரின்
சீலமெய்ப் பதிகந் தனிலுரைத்த தொண்டு
　திகழாசீர் மங்கைக் கரசியர்
　　சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
　　　திருமயிலை கபாலீசனே. (௰௧)

மெய்கொள் சோழநாடு சந்திர தீர்த்தமதில்
　வெண்ணாவல் மரத்தி னடியிலே
　　விளங்கிய லிங்கத்தை வெள்ளையானை தினம்
　　　மேவியே சலங்கொண் டபிஷேக
மூய்யச் செய்துபுட்பஞ் சாத்தியே தொழுநா
　ளுண்மை கண்டசிலந்தியு
　　முளமகிழ்ந்து சருகுதிரா வண்ண நூலா
　　　லுகந்து மேற்கட்டி செய்ததைக்கண்டு
துய்ய யானையதை யெடுத்தெரிந்த தனாற்
　சோர்வுற்றுச் சென்றதைக் கொல்லவே
　　துகளடைந் திறந்த வச்சிலந்தி மன்னன்
　　　சுதனாகப் பிறந்து நலமுற்ற
தெய்வநற் பணிசூழ் கோச்செங்கட் சோழனார்
　சீர்மையு நேர்மையு மார்வங் கொட்
　　சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதொழுந்
　　　திருமயிலை கபாலீசனே. (௰௨)

சம்பந்தர்ப் பதிகந் தன்னையாழில் வாசித்து
　சதுரித பொற்பலகை பெற்றுஞ்
　　சந்ததமுஞ் சிவப்புகழை யாலயத்திற்
　　　சாற்று நீலகண்ட யாழ்ப்பாணர்
தம்பிரான் தோழனென் றியம்புஞ் சீர்த்தியுற்ற
　தலைமைசூழ் சுந்தர மூர்த்தியைத்
　　தநயனாகப் பெரும் தவத்தினை யடைந்த
　　　சடையனாரும் இசை ஞானியார்
சம்பிரம வரங்கள்தங்கும் வேதம் நான்கு
　சாற்று தங்கம் பூதியக்கமும்

சென்னை-600 008. 179184

சாதனைத் தவழ சதுர்வித் கவியிற்
சமர்த்தராயுஞ் சிவதியான மெய்ச்
செம்பனுவலுரை காற்பத் தோன் பதின்மர்
திகழப் பொய்ப்பாடா மெய்ப்புலவருஞ்
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதோழுந்
திருமயிலை கபாலீசனே. (௨௧)

உண்ணினும் பசிக்கினு முறங்கினு
முலாவினு மோய்ந்து யிருக்கினு
மொருநிமை யோமு மறவாது சித்தத்தை
யுகந்துமே சிவன்பால் வைத்தவர்
வெண்ணீறென்றே யீசன் றிருவுருவென் றெண்ணி
விகற்ப சாதிசொலொன் றேற்கிலா
மேலவர்க ளடியார்க ளென்று சதா
மெய்மைகொண்டு தொழும் பத்தரும்
என்னு மூன்றுவித தீட்சை நிர்வாண
மெழிலா சார்ய வபிஷேகமு
மேதமற்று பெற்றோர் முழுநீறுப் பூசினோ
ரீசை திருவாரூர்ப் பிறந்தவர்
திண்ணியமாய் அப்பாலு மடிசார்ந்தார் முப்போதுந்
திருமேனி தீண்டுவார் செழுங்கண
சித்தர் பெத்தர்முத்தர் பத்தர் நத்திதோழுந்
திருமயிலை கபாலீசனே. (௨௨)

——)§(——

மனோபதேச மாண்புயர்மாலை என்னும்

தேகபோக ஸ்திரமுணர்த்துதல்.

எண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆரணங்கள் மூலியமா யளவிறந்த தெய்வ
வந்தரங்க் தனையருளி யவைக்குமூலப் பொருளைக்
காரண காரியமாக நேரிற்சொல்ல குருவாய்க்
கடைக்கண்சாத் திடவந்துங் காணும்புண்ணிய மிலையேற்
பூரணு னந்தஞானப் புதைப்பொருள் வந்திடுமோ ?
பொய்யுடலை மெய்யென்றெண்ணி போசனத்திற் குழைத்தாய்
நாரணனு நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧)

பந்தமெனு மாயப்பெண் சாயப்பெண்ணைக் கலந்து
  பகாரிய வேஷமெல்லாம் போட்டுவீண்சொல் கேட்டு
மந்திவெனப் பல்லிளித்து மாருட்ட போராட்ட
  வலிமலிந்து பெலிபூனை வாய்ப்பட்டழு வண்ணம்
புந்திவிட்டு சந்துட்பட்டு நிந்தைக்குட்பட் டொன்பது
  பொத்தலை யடைக்கவேண்டி பிரவுபக லுழைத்தாய்
நந்தியெனு மால்விடைமேல் வருங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (உ

அகரமெனுஞ் சிவமதுபி ராகியனைத் தினுளு
  மசைவாடி பசைகூடி நசியப்பசி நீடி
உகரமெனு முடலோம்ப வொன்பது வாயிலுள
  வுறவின ரைவர்களினு லோகோபல சேட்டை
மகரமெனு மயலியலிற் பிணைப்பட்டவூன் கொழுக்க
  மரக்கறிக ளிலைக்கனிகாய் வரும்வழிக்கே யுழைத்தாய்
நகரமெனு நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௩)

சரணம்போடு நெஞ்சேவுன் காரியமெலா மிடரே
  கண்கட்டிக் காட்டில்விடக் கலங்குஞ்சிவ னதைப்போல்
தரணியெலா முனதுசொந்த மெனப்பொய்க்கொள்கைக் கொண்டு
  தானென்ற கர்வமதால் நல்லோர்சாபம் பெற்று
வரமிழந்து மாமிஷத்தோ டென்புபுலா னரம்பு
  வலுக்கமலந் தனில்முளைத்த வலைகளைத்தின் றுழைத்தாய்
நரசிம்ஹ நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪)

மூலப்பிர ணவபஞ்சாக் கரந்தனையுட் கொண்டு
  முத்தருமென் சித்தர்பல பெத்தர் பத்தாளுர்
சாலவனவ நெறியில்லாது வோட்டைக்கடப் படைத்து
  சகல வாசனையுடனே தளுக்குடுப்பு வுடுத்தி
பால்மோர்த்தயிர் வெண்ணெய்யேடு நெய்க ளெதவ்ஷ்டமதாய்
  பழஞ்சர்க்கரை பிணிப்புள்ளப் பலகாரத்திற் குழைத்தாய்
ஞாலம்புகழ் நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே (௫)

எண்ணுவது கோடிகோடி யிழந்தாற்பெருந் துக்க
  மிழவுவந்தா லெல்லையுமின்றி யேகுஞ்சுடு காட்டைப்

பன்னும்பூசை யதின்பயனே பலிக்குமிறு தியினிற்
பகலவன்போல் தெரியவிட்டார்ப் பலன்பெறலெங் ஙனங்காண்
உண்ணலின்றி வுயிர்ப்பிழைத்து யிருந்தாரவ ரெங்கே
வூரெலாந் திரிந்துபிச்சை யெடுத்துயிவ னுழைத்தாய்
ண்ணுநெறி நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬)

அன்றயனி னுண்மையினா லிழந்தானொரு தலையை
யதைக்கையி லேந்தினவ யன்றோதெய்வ மகிமை
தின்றதெலா மலமாச்சம் மலக்கொழுப்பா லுதித்து
சிறந்துநின்ற யிலைக்காய்க்கனி தண்டுபூவுந் துளிர்கள்
வென்றிடுமேழ் வினையென்றெண்ணி வேறுவேறாய்ச் சமைத்திடும்
வேர்க்கநெய்யில் பொரித்துவைக்க மிகவுண் ணுதற் குழைத்தாய்
நன்றிநினை நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௭)

சலந்தீர்த்த மூர்த்தமவைத் தனைவணங்கிச் சகல
சனனபந்தம் போம்சற்குரு கிடைப்பர்முத்தி கிடைக்கும்
புலனிது புலானிதுமெய்ப் பொருளிதுவென் றுணரும்
புத்தியில்லா மத்திபரின் போதனைவீண் பொய்யே
இலவங்கார்த்த கிள்ளையென மண்ணில்விளை வனைத்து
மினிப்புபுளிப் பதுகசப்பு யெனும்பொசிப்புக் குழைத்தாய்
நலந்தருக நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௮)

தானாகுந் திறந்தெரிந்து தலைவன்சிவத் துடனே
தானானற் றானாக்கித் தனைத்தந்தான் றன்றானே
ஊனாகும் பொதிசுமைக்கு ளுளப்புலாலோ டொழுகு
மூதிரஞ்சீ ழுடன்மாங்கிஷ நரம்புசவ்வு நாற்றக்
கானகத்திற் பூத்துதிரு மலசல வாசனையைக்
கட்டவழி யறியாமல் வெட்டியொட்டிப் பேசின்
ஞானமுண்டோ நந்திமிசை வருகுஞ் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௯)

கொங்கணனுஞ் சித்தன்பசி கொண்டுதாங்க முடியாத்
குணம்படைத்து பிச்சையது கேட்ட தருணத்தி
லங்கைநெல்லிக் கனியெனமு னெரிந்தகொக்கு நிலையை
யும்மையவ னுரைக்கவெட்கி யவள்பால் ஞானமுணர்ந்து

பங்கமுற்ற தவைப்பொய்யோ? பட்டினத்தார்ச் சொன்ன
பசிபாட்டை படித்திலையோ? பாழாவதற் குழைத்தாய்
நங்கையுமை யுடனந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰)

காற்றுள்ளப் போதல்லவோ தூற்றவேண்டு மெனமுந்
காலத்துப் பெரியவர்சொல் மலைமேலிட்ட விளக்காம்
சோற்றுக்கே பலசோலி தொல்லையுடன் மதிப்பு
சொல்லரிய மடங்கோயில் சேடர்களூழியர்கள்
போற்றிடு மந்திரதந்திர மெந்திரம்பூசை தெய்வப்
பொருட்படுத்தி நிலைத்திடாம லொழியநாளு முழைத்தாய்
நாற்றிசையும் பணிநந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௧)

ஆத்தாளு மப்பனுமாய் குருதெய்வ மரசனு
மணைமனைவி மக்கட்சுற்ற மித்திரர்கல்வி செல்வப்
பூத்தான மாய்க்கார்க்கும் பொத்தைசொத்தை பூத்தைப்
பொருந்தியமண் ணுங்கடத்திற் பொலியுஞ் சீவனுங்
சாத்தானு மனிதர்தெய்வ கணமாய் நரைதிரையுஞ்
சாக்காடு வெல்லாமல் தெரியாவுண்மைக் குழைத்தாய்
நாத்தழும்பத் தொழுநந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௨)

புன்புலா லல்லவவைப் புன்மைபொறி யைந்துப்
புலனைவென் றப் போதல்லவோ பொருந்துஞான நிலையை
கன்மேந்திரிய மதனுஞ் சுடகலா ததனுந்
கணித்தார் ஞானேந்திரியங் கைவரல் புண்ணியமாம்
தன்மமெல்லாந் தனையறிதற் சற்குரு தீட்சையினுல்
சனனக்கடல் தாண்டலென்ற முறைதெரியா துழைத்தாய்
நன்மைதவழ் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௩)

பாடனைத்தும் விட்டவரே பாத தரிசனையின்
பாக்கியமில்லை யென்றழுதரர்ப் பாபிநீயென் பறைவாய்?
வேடத்திற்கே மதிமயங்கி விமலன்பக்தி யிழக்கும்
வீணருக்குங் கோணருக்கும் விளம்புவரியார்? நாணம்
ஆடலுக்கும் பாடலுக்கு மாலசைவைத்த சிவன்ரு
ளாசித்துப் பூசைசெய்யா வறிவிலியா யுழைத்தாய்

நாடகஞ்செய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௪)

ஆடாத வாட்டமெல்லா மாடியாடிக் களித்து
  யாருநம்முன் சிறுபதரென் றெண்ணியகங் கரித்து
யாடாதப் பாட்டிசைத்துத் தலையாட்டிகைக் கொட்டி
  பல்லிளித்து மாடோட்டும் பையலென வதட்டி
கூடாதா ரிடம்வலியக் கூட்டுறவுக் கொண்டு
  கொழுத்தப்பல வூனடைத்து மலைத்துமாயைக் குழைத்தாய்
நாடாண்ட நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௫)

உலகம்வந்த நாள்முதலா யுதித்தவுயிர்க ளெல்லா
  மொழியாது யிவணிருந்தா லிப்போதுள நாமெலாந்
தலங்கண்டு வசித்துநன்மைத் தீமைவாழ்வுத் தாழ்வைத்
  தானடைந்து வனுபவிக்க முடியாதப்பா முடியா?
சலமுமண் ணுங் காற்றுகாயம் தேய்வதைக்கொள் சனனந்
  தட்டென பொட்டெனவிழுஞ் சாக்காடதற்கே யுழைத்தாய்
நலமலிந்த நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௬)

பார்க்குளறி வாளியைப்போல் பகட்டுஞானம் பேசிப்
  பகல்வேடம் பூண்டுலகோர் பத்தியதைக் கெடுத்து
சீர்க்கெட்டு வந்தசென்ம பயனடையாப் படியே
  சிவசமயப் பயிரோங்குஞ் சித்திபுத்தி யின்றி
ஆர்க்கெட்டா னமக்கென்ன செய்ப்பால் தயிர்வெண்ணெ
  யவையோடன்னம் பொசித்தாற்போது மெனவீணுக்குழைத்தாய்
நார்க்குப்பூவாய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௭)

வஞ்சக்குண முளவரையில் மாறுமோவூழ் வினையு
  மங்கள சிவஞானங் குருவன்றி வந்திடுமோ?
தஞ்சந்தந்தோர்த் தங்களுக்கே சகடையதை முடித்துத்
  தலையாட்டி பல்காட்டி ஞானமொழிப் பேசி
கெஞ்சினவை மறந்துயிந்நாட் கிடைத்தபெரும் பெயரின்
  கீர்த்திக்கலைச் சிற்றனர்போ லுற்றவுடற் குழைத்தாய்
நஞ்சுண்டு நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௮)

பழையனவைக் கழி[illegible]ன் புதியனவைப் புகுமோர்
 பாட்டமைக்கு மிலக்கணநன் னூலவை[illegible]ளதைத்
தழையச்செய் திடவேண்டி சமயநெறித் தொழும்பு
 சார்ந்த வாசாரம்பக்தி தெய்வப்பூசை விரதம்
விழைந்தவர்க ளறிவிலிக ளெனவீண்கடைப் பரப்பி
 விட்டனையே தொட்டனையூழ்க் கெட்டவனென் றுழைத்தாய்
நழைமலிய நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே (௧௯)

உண்ணுமது துண்பதற்கு முறங்கா துறங்குதற்கு
 முள்ளவுள் வறிந்தவர்க ளொன்றுஞ்சொல்லா தொழிந்தார்?
பண்ணுமற் பண்ணும்பூசை பணியாப்பணி கோயிற்
 பலித்தவர்க ளிருந்தபடி பார்த்துகளிப் படைந்தார்?
எண்ணாத வெண்ணமது யெதுவரையி லுளதோ
 யேகாந்தம் வருவதில்லை யிழியுட்லுக் குழைத்தாய்
நண்ணும நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௰)

எலியதுவு மணியுக்தீப மதனைத் தூண்டியதா
 லிராசனெனப் பிறந்திலகை யாண்டகதைத் தெரிந்தும்
புலியதனைக் கண்டபூனை சூடேற்றநேர்ப் பெரிதாம்
 புண்ணியம் பிறர்மெச்ச கோடிக்கோடி செய்து
மலைவுற்று வலைநீங்கிய வோர்க்குறைவின் வசத்தால்
 வந்தணுகும் பவந்தெரியா தந்தோவீணுக் குழைத்தாய்
நலந்தருக நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௧)

சோமனின் முனமின்மினிப் புழுநிகராய் விடுமோ
 சூரியன் முன்னம்பனி வொழியாநிலைப் படுமோ
நேமநிட்டை யுடையவர்முன் நீச்சர்தலை யெடுத்து
 நிற்பதற் காமோவதுபோ னெறியுற்ற பெரியர்முன்
எமனென வெதிர்த்துபல யிடுக்கணதைச் செயினு
 மெரியனல்முன் பஞ்சாகு நிலையறியா துழைத்தாய்
நாமங்கொண்ட நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௨)

கந்தமூலந் தனைப்பொசித்துக் கனல்நடுவி லிருந்து
 கண்மூடி செவியடைத்துக் கால்தலைக் கீழாக்கி

பொந்துகளிற் புகுந்துமலைப் புக்கிவளைந் திருந்து
போகயோ[illegible]சாக தாகம்பசி யற்று
ஞாதாரிய மனைவிமக்க ளின்றியவை யடைத்து
யிருப்பவரெங் குளரவரை யறியாதூனுக் குழைத்தாய்
நந்தியெனு மால்விடைமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனமே. (௨௩)

ஓட்டையுமொன் பதுவுளது வோரவழக் குரைத்து
வொதியமர மானதிது தொதிபெருத்த தொந்திக்
காட்டையடைத் திடும்வேளைக் கணக்குளதோ யிலைகாண்
கண்கெட்ட மாடெனவே காலமதைக் கழித்து
வூட்டிவூட்டி யுண்பதெல்லாஞ் சதையுதிரந் தழைத்த
வூத்தைகடம் நாற்றப்பிண மாவதற்கே யுழைத்தாய்
நாட்டியஞ்செய் நந்திமிசை வருகுங் க்பாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனமே, (௨௪)

யோசிக்கும் வேளையினில் பசிதீர வுண்பதுவு
முறங்குவதாய் முடியுமென வுரைத்த தாயுமானர்
பாசாடவிக் குட்செல்லா தவர்களல் லவோவொரு
பருக்கையுமுண் ணாதுபிணி நரைதிரை துன்பசுகம்
நேசஞ்சொந்த மன்னியமுங் குளிர்ப்பனி வெய்யலிருள்
நேர்வதிலை யெனச்சொன்னதை யறியாதூனுக் குழைத்தாய்
ஞாசமுள நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனமே, (௨௫)

எத்தனையென் றெண்ணுவையு ளிருதயத்தி லெழுந்து
யிங்குமங்கு மலைந்துவுனக் கேற்றவரைக் கூடி
சத்தியவா னுனைநிகரித் தரணியி லில்லையென
தன்மவாரி யெனப்பகட்டி சாதுக்களுக் கிடர்செய்
துத்தம நெறிகடந்து வூத்தைக்குழி யடைத்து
வொப்பாரி சொல்லியழு தொழியவூனுக் குழைத்தாய்
நத்திதொழு நந்திமிசை வருகுஞ் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனமே, (௨௬)

பிச்சைகேட்க வந்தசிவ னடியவரை மதிக்காப்
பெண்மணியாந் தாசியவள் கணவனுட னுண்ட
எச்சைசாத மதையிட்ட யின்னலெனும் பாவ
மிறுதியினிற் பெண்நாயாய்ப் பிறந்தடியா ரிடத்தே

எச்சலதை யருந்திமுத்தி யடைந்தவுண்மைத் தெரிந்து
மிடுவார்வாயில் கார்த்திருந் தேமாந்து சோற்றுக்குழைத்தாய்
நச்சகன்ற நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௭)

அன்னமயத்தா லல்லவோ பிராணமய மிருப்ப
தறியாதா ரருந்தாம லிருந்தா ரிருப்பவரியார்
பொன்னவைக்கு மாற்றுவொளிப் பொருந்தி நிற்பதெனலான்
பொத்தைசொத்தை யாக்கையிதுப் போசனத்தா னிலைக்கும்
பொன்னகரன் கர்னனவ னன்னமிடா தாலே
புவிபிறந்தா னவைபொய்யோ? போனகத்திற் குழைத்தாய்
நன்மைதர நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௮)

ஆசாரந் தவரினனா மன்னை தந்தை குருக்க
ளாசரித்த சமையமதைத் கைவிட்டவ னெனினும்
கூசாது பெரியோரைப் பழித்து களிப்பெய்தி
சோணனடை யுடையவ னென்கினுந் தொந்தியைநிறப்பி
வாசா கயிங்கரிய னாகவுப சார
வார்த்தைசொல வூன்கொழுக்கத் தின்றுநாளைக் கழித்தாய்
நாசமற நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௨௯)

வாசிவா சிவாவெனவே தாரையூது மிடத்தின்
வழிகண்டு சுழியண்டும் விழியண்டி யழியா
தேசிகனா ரருட்பெற்று சிந்தையதை யடக்கி
தினகரனா யொளிருஞான பீடத் தமராமல்
எசியேசி யவையிடினு மெடுத்தவை களுண்டு
யீனமின்றி பேய்போல வலைந்துநாளைக் கழித்தாய்
நாசிமுனை யதனடுவி லாடுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௩௰)

அஞ்ஞானி ஞானியென யிருவகையா யுயர்ந்த
ஆதரையி லியாவரையு மயக்கி கெடுப்பவர்க
ளெஞ்ஞான்று முளரோவென யெடுத்தாராய்ந்து பார்த்தா
லின்பமுட னுண்ண லுடுத்தலும் பொருட்சேகரித்தற்
கொஞ்சமேனு நாணந்தயை யின்றி கொடுப்பவரைக்
கொண்டாடி மரித்தலுக்கே நாளொழிய வுழைத்தாய்

நஞ்சுண்டு நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௧)

முத்தர்கட்கு முனிவரர்க்கு முள்ளசிந்தை யொன்றாய்
 முடிவதனு லந்நிலையி லாட்படுநாள் வந்தா
லத்தகையா ருற்றபிடந் தெரியு மதுவதுவா
 யானபின்ன ரவையுன்முனந் தோன் றுமியாவு மொழியும்
சித்தர்களி லெத்தனைபேர் செனித்து யில்லறத்தை
 சிறப்புறவே நடத்திபின்னர் துறவறத்தை யடைந்தார்
நத்திதுதி நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௨)

எவரெனினு மென்னமதி யாதவர்கட் பலகா
 விழிவுரைத்து மிடுக்கண்செய்து யேசியிடுஞ் சோற்றைத்
தவராது மெடுத்துபொசித் தவர்வாயில் கார்த்து
 சாக்காடு தலைக்கொண்டு தவிப்பதென்ன கொடுமை?
அவமகற்றி தனித்துநல்ல சிந்தைகொண்டு வுயிரு
 மகலுவரைக் கையேந்தி வுண்ணுமலிங் குழைத்தாய்
நவமிலகு நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௩)

பொய்சொலலும் ஏசுதலும் போலபொல்லா கொலையிப்
 பூதலத்தி லெடுத்துசொன்ன வேதமெங்கு மிலையால்
உய்யுநெறி கண்டவர்க ளுநமையென வொன்று
 முரையாது மௌனமுதை யடைந்தது வுண்மையன்றோ?
தெய்வத்தன்மைக் கைவரினே சிந்தை சிவமாகத்
 தெளிந்திருக்கு மிதையறியாய் திண்டிக்கேநீ யுழைத்தாய்
கைவினையில் நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௪)

தவத்தினள வாகயிவண் சனித்து வயதோங்கி
 சகலமறைக் கற்றசைவ சமயநெறிப் [illegible]
சிவயநம வெனவெண்ணீறுப் பூசியேசந் தனத்தாற்
 றிலதமிட்டு பக்திசெய்து யெழுத்தைந்தையு ணினைந்து
பவக்கடலைக் கடந்தநல்லோர்ப் பரமபுரு ஷர்களாய்ப்
 பகரரிய சிவஞானப் பாலருந்தி வாழ்ந்தார்
நவமிலகு நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௫)

எல்லாமுன் னிடத்திருப்ப தாகவெண்ணி மலைத்து
　யிடருற்றலைப் புன்செயலா லென்னோ அனுபவிப்பாய்
கல்லேனுங் கணவன் புல்லேனும் புருஷனெனக்
　கற்புடைய மங்கையரின் கருத்தெனும் பூர்வமொழி
வல்லமையாய்க் கடைப்பிடித்தோர்த் தங்களின் முன்றறவி
　வணங்கிடுவ னவர்கண்வலி செல்லாதென்பர்ப் பெரியோர்
நல்லகுண நந்திமிசை வருகுங் கபாலீசன்
　நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௬)

தந்திரத்திற் றலைமையனாய்த் தனதுவேலை முடிக்கத்
　தற்புகழ்ச்சி மிகுபேசி சார்ந்தவரை மயக்கி
சிந்தைதனை வயப்படுத்தி தெய்வநெறிக் கெடுத்து
　செகமெச்சப் பொய்பேசித் திரிகின்றனை வையகோ?
மந்திரத்தில் மாங்காய்விழா தெனுமுன்னோர்சொல் பழுதாய்
　வருத்தது சாமார்த்தியமே நன்றிதனை மறந்தாய்
நந்திமிசை சாரிவந்து காக்குங் கபாலீசன்
　நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௭)

சித்தரென்பார் முத்தரென்பார் செகத்தைப்போல் வேறொன்றுச்
　செய்வோமென்பார் பலமாயைக் காட்டிமயக் கிடுவார்
எத்தியெத்திப் பொருளெவ்வழி வருமோ அவ்வழிக்கே
　யிரவுபக லுழைத்திடுவா ரேமாறவுஞ் செய்வார்
பத்தியெல்லாம் வாய்க்குணவு பால்பழஞ் சர்க்கரையும்
　பருப்புநெய் தயிர்வெண்ணெய்மோர் பலகாரமுண் டுழைத்தாய்
நத்திதொழ நந்திமிசை வருகுங் கபாலீசன்
　நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௮)

ஓயாமற் பொய்சொலலு முறவைக் கெடுத்தலுநல்
　லோர்கட்சாபம் பெறலுந்தெய்வப் பணிக்கிடும்புச் செயலும்
தாயாரைத் தந்தையரை மனநோக வைதலுஞ்சேர்த்
　தருகுங்குரு மொழிக்குயிடர்ப் புரிதலு நம்பினரைக்
காயாத மரமாக்கி வேரில்வெந்நீர் விடலுங்
　காலன்குண மென்பதல்லான் கருதுவதோன் றிலைகாண்
ஞாயமுட நந்திமிசை வருகுங் கபாலீசன்
　நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௰௯)

குடுமியில்லாத் தேங்காயைக் கொள்வரியார்க் கோவிலுக்கு
　குற்றமுள்ள நெஞ்சினிலே குருமொழித் தங்கிடுமோ?

அடுத்துகெடுத் திடவெண்ணி யனுகி மோசம்பேசி
  லண்ணலின்முக் கண்ணிருக்க வவைக்கு மறைவாமோ ?
படுத்தப்பாய்ப் பகையாகிற் பகர்வது வொன்றுளதோ
  பாழாக்கு முப்பாசைத் துறந்தவரே சிறந்தோர்
நடுநிலையாய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪௰)

கூட்டமெங்கே கொள்கையெங்கே குணமுமின மெங்கே
  கொண்டதெங்கே கொடுத்ததெங்கே கோபசாப மெங்கே
தேட்டமெங்கே செல்வமெங்கே செய்தசெய லெங்கே
  தீரமெங்கே வீரமெங்கே சிந்தைசொந்த மெங்கே
ஆட்டமெங்கே பாட்டெங்கே அன்பும்பகை யெங்கே
  ஆண்டவன்முன் செய்தசத்திய மகன்றநன்மை யெங்கே
நாட்டமுட னந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே, (௪௧)

துட்டருக்கு பயப்படுவார் துணைசெய்வது முண்டு
  சூதருக்கும் வாதருக்கும் [illegible]க்கு மவையே.
அட்டமா சித்தியுள்ளோ ராயினுமென் செய்வா
  ரரவமடங் குதல்போல வாப்தர்களு மிருப்பர்
பட்டம்பக லிரவெனிலோ பகற்குருட்டுப் பறவைப்
  பார்வையற்றுத் திரிதலனு பவமே மறப்பவரியார் ?
நட்டமாடி நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪௨)

இட்டதையுந் தொட்டதையுஞ் சுட்டுசுட்டுப் பொசுக்கி
  ஈயெறும்பு தனக்கிடாம லுண்டுபசி யாற்றி
பட்டமென வூர்த்திரிந்து சொல்லிசொல்லி மகிழ்ந்தால்
  பாரிலெவர் வேண்டுவரோ பரனேனு மெள்ளுவர்காண் ?
மட்டளவிலா தன்மத்தை வகுத்த முன்னோர்கள்தன்
  வாயினுல் வசனிக்க பயந்தனர் சாட்சியமேன்
நட்டம்புரி நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪௩)

தானதவ மதுமலிய சாந்தம்பொறை யடக்கஞ்
  சற்குரு தீட்சையுஞ்சமையாச் சாரியர்கள் விஸ்வாசம்
மானத பூசையுந்தந்தை தாய்மரபு வாய்மை
  மதிநூலை விதரணமும் வாய்த்திடினுந் தன்னை

மோனவரை யதிலேத்தி மூத்திரோர் சமாதி
மூழ்கினல்லா லியாதும்பய னிலையறியா துழைத்தாய்
ஞானமுணர் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெக் நாளுந்தொழு மனனே. (௪௪)

ஆற்றில்நின்றுந் துறையறியான் போலவுல கனித்திய
மளவில்லா தவையறிந்துந் தலைமயக்கங் கொண்டாய்
சேற்றினட்டக் கம்பமெனச் சேர்ந்துலக வேட்கைத்
திறம்பணித்து கலகலத்துத் தியங்கித்தனி நின்றாய்
தூற்றுவர்கள் வாயில்கார்த்து சோற்றுத் துருத்திதனைச்
சொந்தமென கிடைத்தவுணை யூட்டியேநாட் கழித்தாய்
நாற்றிசையும் பணிநந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪௫)

உள்ளனவை யுள்ளபடி யுணர்த்தியாளுங் குருதாட்
குகந்துபணி செய்துவேண்டு வனவளித்து மனதி
லெள்ளளவும் வஞ்சமின்றி யீன்றதந்தை யிவரென்
றெண்ணியொரு சிறிதும்நீங்கா துழைத்தவ ரன்பதனை
வள்ளலென வழங்கும்வரைக் கார்த்திருப்போன் சீடன்
வரமுமுண்டு ஞானமலி வாழ்வுஞ்சித்தி கிடைக்கும்
ஞள்ளலற நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெங் நாளுந்தொழு மனனே. (௪௬)

போனதையும் வந்ததையும் போட்டுயிட்டுக் கொடுத்த
பொள்ளலெனுங் கந்தைகளைப் பொறுக்கி புருவாக்கி
ஆனமட்டும் வாய்க்கூசாமற் பேசிலெவர் மகிழ்வா
ரவரவர்கட் கானவரே அவரந்தஸ்தின் படியே
யீனமின்றி நாணமின்றி யெதிரியுமின் றெனவே
யேசிடினு மவரவர்க்கு முண்டுபெங் கதிலே
ஞானமுணர் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௪௭)

பொய்யெழுதும் புலவர்களின் போக்கைநம்பி மதிக்கும்
புலையர்கட்குத் தலைமையனாய் நிலையைவிட் டலைந்தாய்
மெய்யெழுதும் வித்தகர்கள் சித்தமதைப் புண்செய்
வீணருக்குங் கோணருக்கும் புத்திசொல்வா ருளரோ?
வெய்யவன்போல் வாதைத்தரும் பசியெனுநோ யகற்ற
வெகுபாடு பட்டல்லோவிவ் வூக்கைப்பள்ள முடைத்தாய்

னையவினை நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (சஅ)

பொன்வெள்ளி செய்கின்றப் புரவலர்க ளுண்டு
  பொருள்வேண்டி யனர்த்தகர்மஞ் செய்தமுடிப் பதுவு
மன்னவை யில்லாதுமகி யாழ்ந்தலைத லுளதா
  பரல்வழிய சகலகலம் பொலமுமனு பவித்து
யின்னவிது யெனவறியா திழன்று நினைநோ
  மேமன்வந்து பங்குகொள வேண்டிதிண்டிக் குழைத்தாய்
நன்மைதர நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (சகூ)

பாடுபட்டப் பெரியோரைப் பகைத்துபழி கூறி
  பரிதாபஞ் சற்றுமின்றி யிடுக்கணது செய்து
கேடுகெட்ட செனனமென பொய்யைக்கடைப் பரப்பி
  கீர்த்திபெற யெண்ணுகின்ற கிருபையில்லாப் பிறவி
ஆடுவொரு யிடத்திருந்து தழையதை யுண்டுபசி
  யாற்றுது வலைவனப்போ லுண்ணலுக்கே வுழைத்தாய்
காடுதற்கு நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருய)

சொற்சோர்வு படவுரைத்து தியாத்தைக் கொள்வதினுஞ்
  சொல்லாது மௌனமுறுந் தொழிலது மிக்கநலம்
புற்கொண்டு பூசைசெய்யும் புண்யமது குறைய
  புத்திசற்று மிளைக்காமற் றலைமயிரைக் கொளுத்தி
சிற்பரமெய் வரமடைந்த செய்தியைக் கேட்டிலையோ?
  தீயவரை விட்டேனி செல்லாதுனுக் குழைத்தாய்
கற்சுகஞ்சூழ் நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருக)

எத்தனையோ சுகதுக்க மெய்தியெய்தி னைந்து
  மின்னுமுனைப் பூர்வவினை ஆசாபாச மயக்கம்
சத்தொழிந்து மண்ணுள்மண்ணாய்ச் சாரும்வரைப் பிடித்துத்
  தானுட்ட வுட்படுதேல் சரியோ? சரியல்ல
புத்துருக்கு நெய்யுடனே பொசித்திடினு மலமாய்ப்
  போவதுதான் கண்காட்சிப் பொருந்தவுனுக் குழைத்தாய்
நத்திதொழ நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருஉ)

மக்கள்மனை சுற்றம்பெற்றோ ருறவினர் மித்திரர்கள்
மாற்றானைப் போலெதிர்த்துன் னுயிரை வாங்கவுண்ணி
தக்கபுத்தி வஞ்சச்செயல் மதியாதேசி பகைக்கத்
தானறிந்து மின்னுநம்பித் தான்கெடுத னலமோ?
தொக்கிபின்னு நாசமாகாப் படிதனித்து மறைவாய்ச்
சோதனைக்கா ளாகாதுத் துணியாப்படி யுழைத்தாய்
நக்கனென நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௩)

பலநாளின் றுக்கமது வொருமுழுக்கி லொழியப்
பார்த்திலையோ? பார்த்தின்னும் பற்றுவிடா தென்கொல்?
குலமேது தலமேது குணமுமண மேது
கொண்டதேது கொடுத்ததேது கொடுப்போவ தஃதேது
சலத்திற்கரை உப்பெனவே சகலநலம் பொலமுஞ்
சங்கரனி னருளாலழிக் காதுதிண்டிக் குழைத்தாய்
நலங்குலவ நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௪)

வளர்த்தக்கடாக் கையிற்பாயும் வழக்கமது பொய்யாய்
வசனிப்பதற் கொருவர்வெளி வருகுவரோ? இலைகாண்
குளத்தருகே விதிமயக்கப் பெண்ணினுற் றம்பியண்ணன்
கூர்வாளால் மடிந்தகதைப் படித்திலையோ? வதுபோல்
அளகேச னெனினுமென்ன செய்வதற்கொன் றுளா
தனைத்தும்விட்டுத் தனித்திருக்க வகையில்லாம லுழைத்தாய்
களன்வணங்கு நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௫)

பழிபிடித்து வழியடைத்து பட்டது கெட்டதையும்
பாரதினி னட்டதையுந் தொட்டுவிட் டதையும்
கழிபிடிக்க நாள்வருமுன் சேர்ந்தவர்க்கை விடுமுன்,
காலனவ னணுகிடுமுன் தனித்துவோர் மூலையிலே
விழிபிடிக்க கலைசெலுத்தி யுண்டுமுண்ணு துறங்கா
விஞ்சையைப் பெறுதப்படி வீணுக்கையோ? வுழைத்தாய்
நழிபிடிக்க நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௫௬)

ஓடிவோடி வுழைத்தாலு முள்ளதுப் போய்விடுமோ?
ஒருவருண்டோ வுன்றுயரைமாற்றுதற்கு வையகோ?

ஆடிப்பாடிக் கூடிசங்கஞ் சபைகட் பலவாக்கி
அடியவரா யமைச்சபக்து செய்துபஜித்த தெலாம்
நீடினதைப் போல்தெரிந்து நிலையாதவைப் பலவாய்
நிட்ரேஞ் சொல்வதற்கே வுடலையோம்பி வுழைத்தாய்
நாடிமாய நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருஎ)

தண்ணீரில் முழுகிதவஞ் செயுஞ்சடாயு சித்தன்
றன்னடிக்கீழ் மச்சமவை வாழுந்திறங் கண்டு
எண்ணங்கொண்டு மன்னன்மக ளறபதுபேர்த் தனையு
மிணையில்மணங் கொண்டில்லற முஞற்றிநலங் கொடுத்து
மண்ணும்விண்ணும் பணியபல மகிமைசெய்துத் துறந்த
வண்மையதை யுணர்ந்திலாதே யுண்ணலுக்கே யுழைத்தாய்
நண்ணும்படி நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருஅ)

ஐம்பதை யையாயிரமா யெழுதியே முத்திரித்தா
லனுபவிக ளன்றிமற்றோ ரியாரறிய வல்லார்
கும்பலிலே கூச்சலிட்டா லெவரென்று காண்குவபோற்
கொல்லைமேயும் பறவைமிக விருந்தவைகண் மறைய
சம்பிரமசீர் வாய்த்ததெப்போ குருநிழலை யணுகாத்
ததியிலுண்டோ யெனநினையா தந்தோ? வூனுக்குழைத்தாய்
நம்பனென நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ருக)

சீத்தலையன் கலையென்னே திறமும்வண்மை யென்னே
திருவள்ளுவர் முனநின்றதோ தெரிந்திலையே ஒட்டக்
கூத்தன்வலி யரசன்மகள் மதித்தனளோ? பெண்கட்
குணம்பாடிப் புகழேந்திய புலவன்றன்மைச் சிறிதோ?
சேத்துமக் காரன்வந்து சிவனைக் கொள்ளை கொளத்
தேனைவிட்டேக் கசங்குடித்து சேற்றமுற்று வுழைத்தாய்
நாத்தழும்ப துதிநந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (சும)

கற்றதுகை மண்ணளவு கல்லா துலகளவாய்க்
கலைவாணி யெனுமௌவையார் வரையறுத்துச் சொன்ன
வுற்றமொழி யவைமுன்னே யொருவர்மொழிச் செலுமோ?
உத்தமர்க ளன்றிமற்றோ ருணரவா முளதோ?

அற்றதெல்லாம் நினைந்தனைவிண் மீன்பிடிக்குந் திறம்போல்
ஹாஹாஹா வெகுசமர்த்து செய்தலுனக் குழைத்தாய்
நற்றவங்கொ ணந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (கக)

வாதாவில் வளன்போன்ற வலிபிடித்து தடித்து
மயக்கிடினு மெல்லவரு மயங்குவரோ? மயங்கார்
சூதாட்டம் பெருகிடினுந் துகிலிழக்க நேரினுந்
துணைவந்த ததுபொய்யோ? துன்பமின்ப மொன்று
யாதலது வரிதெனினு மருளுடன்பூர்வ புண்ய
மவைவாய்க்கி னலமுண்டென வறியாதுத்தைக் குழைத்தாய்
நாதனென நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (கஉ)

நாயினுக்குங் கேடாக நாவுருசிப் படைத்து
நாளெல்லா முழைத்தலுத்து நங்குபட வாழ்ந்தாய்
தாயவட்குப் பிள்ளைகள்மேற் சலிப்பதுவந் திடுமோ?
தாங்குவா ளெவ்வளவுஞ் சத்தியமொழி யலவோ?
பேயதுவும் மந்திரத்துள் வசப்படும்? மூர்க்குருக்குப்
பிணைப்படுதல் முடிவிற்றுன்பம் பெரிதுணரா துழைத்தாய்
ஞாயமுணர் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (கந)

எண்ணலொன்று பிசைப்பதொன்று யெழுதுவதொன் றுக
யேசலொன்றுப் பேசலொன்று பூசலும் பூசையொன்று
பண்ணலொன்று படித்தலொன்று பட்டநட்ட மொன்று
பார்த்தலொன்று தீர்த்தலொன்று பணியணியு மொன்று
உண்ணலொன்று வுடுத்தலொன்று வுடலைப் பலவிதமா
யுருப்படுத்தி ருசிதருகு முண்டிதிண்டிக் குழைத்தாய்
தண்ணும்படி நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (கச)

சத்தியவரிச் சந்திரனென்த் தானினைத்துப் பொய்யைத்
தலையாட்டி கைநீட்டிச் சமர்த்துகட் பேசிடினும்
ஒத்துக் கொள்வா ருண்டவர்க ளுடன்படுமோன் வரும்போ
தோகோகோ? அறியாமற் போனேனென விழிப்பார்
சத்தடங்கிப் போகுமுனஞ் சாந்தந்தயை பக்தி
சார்ந்திரு வென்றுற்பெரியோர் மறந்தலுனக் குழைத்தாய்

நத்திசதா நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬௫)

கற்றதனாற் பயனென்னரன் கழலைப் பணியாதான்
கார்யமிலா னெனசங்கப் புலவர்தலைக் குனிய
சொற்சோர்வில் லாமற்சொல்லி செயங்கொண்ட வள்ளுவர்முன்
தோன்றிநிற்பா ரொருவரிலை விண்மண் ணறிந்ததுவே
பற்றொழிந்துத் தனியிருந்துப் பசிவேளைக் கையேந்திப்
படுமுணவை யுண்டுபக்தி செய்யாய்வீணுக் குழைத்தாய்
நற்குணஞ்சூழ் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬௬)

தனையறிந்து வொடுக்கமுற்ற தத்வமசி யெனுஞ்சீர்த்
தழைத்திடவே படித்தபடிப் பதுவே சிறந்ததுகாண்?
வினைவலியுந் துணைவலியும் மாற்றான்வலி யறிய
விளக்காத பலசாத்திரந் தனிற் புலமையாகித்
தினையளவும் மெய்யெழுத மெய்ப்பேச கற்காமற்
றீமைச்சொல்லி தடித்துவூனுண் டேவையோநாட் கழித்தாய்
நனிமிகநன் னந்திமிசை வருகுங் கபாலீசன்
கடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬௭)

இறந்தவரை யெண்ணியல்லோ துறவறங் கொண்டனரா
யெழுதினார்த் திருக்குறளிற் றிருவள்ளுவர் முனமே?
இறந்தவரின் பெயரெழுதி நாட்டுகின்ற தவைக
ளிருப்பவர்க ளொப்புதற்கு யிடமுளதோ? வெறும்பொய்
மறந்தழைக்க வாய்ஞானம் பேசி யுலகையெலாம்
வசப்படுத்தி பொருட்பறித்து வுண்டுண்டு மலைத்தாய்
நறவுமொழி நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬௮)

மனைக்காய்ந்தாற் சாணமதால் மெழுகி குடித்தனஞ்செய்
வழக்கமுண்டு மறுப்பவரியார்? மனமது காய்ந்திடினே
முனைப்போரி னிற்போர்பிழைப் பதுவரிதா மவைப்போல்
முரண்படும் வாக்கியமாகும் முத்திவரும் வழிக்கே
நினைப்புநினைப் பற்றநிலை நேர்படினே சுகங்காண்
நிணங்கொண்ட பதார்த்தமெலா முண்ணநாளு முழைத்தாய்
நனிஞான நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௬௯)

உற்றவர் பெற்றவருமுற வினர்மனைவி மக்க
ளுயர்நேச ரன்பரெலாஞ் செல்வம்வரும் வழிக்கே.
சற்றயிலைப் பாறவென்று லொழியாய்ப்படி வுழைத்து
சத்தெல்லா மொடுங்கிநோ டனக்குத்தானே வொழிவாய்?
பற்றற்று லெவையுமுன்னம் பலிக்காதவை மறையும்
பசியொழியும் வரைப்பசையுங் கூடவுண்டு பிழைத்தாய்
நற்றவங்கொ ணந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௭௰)

உயிரோடே கண்ணைக்கட்டி காட்டில் விடுவரைப்போ
லுள்ளசோற்றைப் பூசணிக்குள் மறைத்துவலிப் பேசுந்
தயிரிய முளவன்மெய்ப்பொய்த் தனைக்காண்பவ ரரிதாய்ச்
சாற்றிடுநூன் முறைப்படியே பழித்துசாப மடைவாய்
கயிற்றினைப்பாம் பெனச்சொலினுங் கண்டவர் நம்புவரோ?
கடமதற்கே கொழுத்தவூ னிடவேண்டியே யுழைத்தாய்
நயனம்வைத்த நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௭௧)

சண்முகனுஞ் சம்பந்த மூர்த்தியின்முன் புத்தஞ்
சிமணமவை நின்றதுவோ வுயிர்க்கழு வேறியதே?
எண்முக லட்சணமுடைய சித்தியெல்லா மடைந்தோ
ரெனினுமுத ராக்கினியைத் தணித்தவரே பெரியோர்
ஒண்முகமா யியாவுமெண்ணுங் குணம்படைத்தாற் சருவ
முனக்குள்ளே தோற்றுநெறி யறியாதூனுக் குழைத்தாய்
நண்முகங்கொ ணந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே, (௭௨)

வேடிக்கையாய் முனிகழுத்திற் பாம்பை விளையாட்டாய்
விட்டமன்னன்.மகன்சமுத்திர நடுவிற்குடி யிருந்தும்
வாடிக்கையாய்ச் சித்துசெய்யும் வகையாய் கனியாகி
வழிகொண்டு சலம்பெருக அன்னோனைக் கண்டு
கோடிக்க வூழியர்கட் கொடுக்கவோர்ந்து மரித்த
கொடுஞ்செயல்போல் வினைப்பழுக்க வேண்டிவூனுக் குழைத்தாய்
நாடிசதா நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௭௩)

சாற்றுவபோ னடக்கையில்லாச் சகடைக்குணம் படைத்து
சமஸ்தகலைத் தெரிந்தோமென மனப்பால் குடித்தனையே?

காற்றுப்போனு லென்னச்செய்ய முடியும் மண்ணுள்மறையும்
காட்சியன்றோ? இதைமறுக்க சாட்சியம் வேண்டுவதோ?
தோற்றுப்போனப் படைக்குப்பரி சுண்டோ நன்மையுண்டோ?
சொல்வதென்னே? மாளுதற்கே வுண்டிவேண்டி யுழைத்தாய்
நாற்றிசையும் பணிநந்திமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (எச)

பேச்சற்று மௌனமுற்றுற் பிரமமதுப் பேசும்
பேச்சடங்கா வரையுணர்தற் கரிதென நூற் புகலும்
பாச்சியற்று சோச்சிச்சிப் பலிக்கவுண்டுக் கொழுத்துப்
பகலிரவா யெண்ணிபலப் பட்டாங்கடித் துழன்று
மூச்சுப்போகு நாளதிலே வுதவிசெய் பவரிம்
மூவுலகந் தனிலிலையே நினையாதுழைத்தாய் சிதை
நாச்சிமகிழ் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (எரு)

வான்பெரிது மழைப்பெரிது மதிகதிர் நட்சத்திரம்
வாயுதேய் வுடனப்பு மண்ணுந்தீயும் பெரிது
மான்மழுவு மரவங்கங்கை மங்கைதெய்வப் பருதி
வளரல் முதிர்தலுமிறந்து மானிடச் சட்டைக்கொண்ட
வூன்பெரிது வுடைபெரிது வுண்மைஞான மூடனே
ஒடுக்கம்வர லவைப்பெரிது வுலகக் கடவுளர்க்குள்
நான்பெரிது யெனநந்தியேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (எசு)

சகலவுயிர் களில்மானிட சனனஞ் சிறந்ததெனச்
சாற்றினதின் பயன்றெரிந்தார் சத்தியமெர்டு சாந்தம்
புகழ்தேக மதைப்படைத்து குருநெறிக் காளாகி
புனிதஞான வாழ்வடைந்துப் போற்றும்வரம் படைத்தார்
செகமெச்சப் பால்குடித்து மயக்கமதிற் பெருகி
தீச்செயலுக் குடன்பட்டு திண்டிதனக் குழைத்தாய்
நகநகென நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (எஎ)

சைவமெனு மார்க்கநிலை யறிந்து தீட்சையதனைச்
சற்குருவால் பெற்றுச்சுத்த திருநீறு ருத்ராக்கம்
மெய்திகழ வணிந்துஞ் சிவயநம வெனவே
விதியகல வோதிமறவாதுளத்தி லேத்தி

தெய்வீகத் தன்மைவரும் வரின்பக்தியை நடத்தி
  சிரடையாப் படியர்தோ ? ஆனுடலுக் குழைத்தாய்
கையாண்டி யெனுநந்திமேல் வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெக் நாளுந்தொழு மனனே. (எஅ)

பொன்னருமை யறிந்தவர்க்கே நகையருமைத் தெரியும்
  பொய்யிலா மெய்யரிடம் புகழும் ஞானந்திலங்கும்
மன்னுகின்ற தெய்வசிந்தை யதனிலன்புத் தோணும்
  மட்டிகுண குரங்கதுதன் சேட்டைவிட லரிது?
தன்மத்திற் கொருபோதுந் துன்பமது யில்லை
  சாபம்பெற யிறுமாந்து திண்டியதற் குழைத்தாய்
நன்மைதா நந்தியிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (எகூ)

சாத்தனெனுஞ் சித்தலையன் கற்றுவல்லோ னெனினுந்
  தனையறிந்து யடங்குநிலைக் காணலின்றித் தவிக்க
பூத்தமலர்க் கமழும்வண்ணந் திருவள்ளுவர் மொழியாற்
  பூசைதவஞ் சிறந்தபடிக் கண்டு தெளிந்தனனே?
நேத்திரமில்லா தண்டியைப்போ லியாரறிய வல்லார்?
  நீட்டையது கஷ்டமென்றே விட்டுவூனுக் குழைத்தாய்
காத்தழும்ப துதிநந்திமேல் வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (அ௰)

பொல்லாத மூர்க்கருக்கென் போதித்து நன்மையதுப்
  பொருந்தச்செய் திடினுமவர் புத்தியைவிட் டகலார்
கல்லாத பேர்களேநல் லவரெனவே சைவக்
  கண்மணியார் தாயுமானு ருரைத்த நிலையறியாய்
எல்லாரு மானிடரோ? கற்றவரோ? அலவென்
  றேந்தல் துணிந்துடிமொழியை யுணராய்திண்டிக் குழைத்தாய்
நல்லதவ நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (அக)

அகங்காரப் பேய்ப்பிடித்து வாட்டதலை யாட்டி
  யணங்கையர்ப்போற் பற்காட்டி குரங்கெனவே யிளித்து
சுகமிதுதா னெனநினைந்துத் தின்றுபன்றி யாகித்
  துறைதெரியா திறுமாந்து எழுத்தறிவு னென்னுந்
தகைமைத் தெரியாமையினாற் பழிபிழிவை யெழுதி
  சாபமதைக் கொண்டனைப்பின் பிணமாதற் குழைத்தாய்

நகைகிலவு நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே.   (அஉ)

படித்தபடி நடக்கைகுண மறிவுஞான வொழுக்கம்
பற்றினபேர் நலமடைந்தா ரவைக்கு மாறுட்டமதாய்
குடித்தனமுந் தடித்தனமுங் கொண்டலைபேய்ச் செருக்கிற்
குணம்படைத்த நல்லவர்க ளாசிரெங்கென் கிடைக்கும்
முடிக்குமுடி தரித்துமென்ன முண்டகஞ்செய் கினுமென்
முத்திவழி யணுகுநெறி யிழந்துதிண்டிக் குழைத்தாய்
கடித்துசதா நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே.   (அங)

பற்றற்று நிற்குகிலைப் பற்றிடிற் பற்றினவைப்
பறந்தோடும் பறவையெனப் பலிக்குங்கன்ம மொழியும்
சுற்றுகின்ற கொடியதைப்போற் சூழ்ந்தொடுக்கும் வினையாஞ்
சுழல்காற்றி லகப்பட்டலைந் தனையிதிலென் சுகமே?
கற்றவரைக் கற்றவர்கள் காமுறுவ ரெனுஞ்சொல்
கவனித்திலை யென்படித்தாய்? சாப்பாட்டிற்கே யுழைத்தாய்
கற்றவஞ்செய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே.   (அச)

சுழியறியா தவர்க்குவேத சூட்சமென்னத் தெரியுஞ்
சுத்தசித்த மில்லார்க்கு சுழுச்சி சொரூபமதின்
வழியறிந்து வணங்கும்புத்தி வாய்ப்பதிலை உண்மை
வசனிக்கா ரிடத்திலன்புஞ் சிவமுந் தங்குவதிலை
பழிவாங்கி யுயிருண்ணும் பாதகத்தில் மிகுந்தாற்
படுவாருனை யன்றியெவர் பணியா தூனுக் குழைத்தாய்
கழிகைக்கொண்டு நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே.   (அரு)

வந்தித்து வழிபாடு செய்தமெய் யடியவர்
மானிலமெலாம் வணங்க வரமதை பெற்றனரே?
சிந்திக்குந் திறமதுவுந் திடினேசர்வ வினையுந்
தீண்டாது வொழிந்துவிடுஞ் சிவசத்திபால் கிடைக்கும்
விந்தைமிகு மகிமைபல விளங்குந் தெய்வமெனவே
வேண்டுவோர்கா ணிதற்குழையாப் படிதிண்டிக்கே யுழைத்தாய்
நந்தியெனு மால்விடைமேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே.   (அசு)

சாதனைக ஞான்கதிலே சடமுமுயிர் வடிவாய்த்
தாமாக நிற்குஞ்சத்திய தத்வமசி முடிவை
ஆசவன்போ லணுகிவினை யாவுநீங்கித் தனியா
யறிவதறிக் தறிவாயர சோச்சி யிருதயத்தில்
வேதபோத பேதநாத காதலற்று சுழுச்சி
விஞ்சைதருங் குருவடியை விரும்பா தூனுக்குழைத்தாய்
நாதனென நந்தியிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௮௭)

சன்யாசி வான்ப்பிர சித்தன்பிர்மா சாரியெனச்
சாற்றிடு மூவர்க்குந்துணை யாகுவன் இல்லறத்தான்
கன்மதன்மஞ் செய்துதுறந் தார்த்துவ்வாதா ரிறந்தார்
களுக்குரிமை முடித்துவைப்பான் கடவுளின் காட்சியுள
சென்ம சாபல்யமாகும் வரையும் பிறப்புவிடா
தெளிந்திலையே யிரவுபகற் பொசிப்புவேண்டி வுழைத்தாய்
நன்மைதர நந்தியிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௮௮)

அந்தரத்தில் வீடுகட்டி வாழ்நுவ ஞயிடினு
மாதரையில் விழுந்திறக்க வேண்டுவ தல்லாது
பிந்துகளை மூன்றுக்கு மெட்டாத பிரணவத்துட்
பீடுபெற முடிந்திடுமென் றெண்ணுவதென் பயன்காண்?
சிந்தையதை சிவமாக்குஞ் சித்திபுத்தி வரினே
சீரணுகு மிதையிழந்து சோற்றுமூட்டைக் குழைத்தாய்
நந்தியெனு நாரணன்மேல் வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௮௯)

போட்டவிடந் தனிற்கிடக்குஞ் சிலையெனவே மௌனம்
பொருந்திடுநாள் வாய்ப்பதுவே சைவமதி சமயம்
காட்டிலெரி நிலவெனவே கரணவழிச் சென்று
காலமது கழித்துயிரைக் காலனுக்கு கொடுக்க
வூட்டிவூட்டிப் பலதினுசா யுடலதைக் கார்த்திடவே
வுழைத்தலுத்து நொந்துநைந்து வூனதற்கே யுழைத்தாய்
காட்டியஞ்செய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௯௰)

வெளுத்ததெல்லாம் பாலெனவும் வெறுப்பு விருப்பமில்லா
விஞ்சைக்குண முடையவரே மேலவர்கா ணுலகில்

தளுக்குகடை சளுக்குவுடை சரசமொழி நல்லோர்
  தனக்காகாச் செயல்படைத்து சமயவேட மணிந்து
* யிளுக்குடைய னெனப்பெயர்கொண் டெத்தனை நா ளிருப்பாய்
  ஏகாந்தங் கொண்டிடாமற் சாப்பாட்டிற்கே யுழைத்தாய்
ஞளுக்கினிய நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௧)

பலபேத வடிவமெல்லாம் பரமனுரு தானே
  பார்த்தவனு பவிகளதை மறைக்காமலே மறையு
ளிலகும்படி சுருதியுக்தி யவையின் முடிவாக
  யெழுதிவைத்தா ரதைக்காட்ட குருமூர்த்தியாய் வந்தார்
அலகைக்குண மெனுமஞ்ஞான வக்ரமத்தில் விளங்கா
  தாதலினுற் பொத்தலுக்கு அடிசில்வேண்டி யுழைத்தாய்
நலந்தரவே நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௨)

சந்திரனைப் பார்த்துநின்று நாய்க்குரைத்தப் போழ்துந்
  தாழ்ச்சியுண்டோ வதற்குரிய மாட்சிமைப்போய் விடுமோ ?
மந்தியெனுங் குரங்கதுதன் புட்டத்தையே கண்டு
  மகிழ்ந்தாலு மிகழ்ச்சியல்லாற் புகழ்ச்சி வந்திடுமோ ?
தந்தைக்கு மைந்தனே சத்துருவெனுங் கூற்றுனுந்
  சாற்றுவதென் னிதையுணராப் படிதிண்டிக்கே யுழைத்தாய்
நந்தியெனு மால்விடைமேல் வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே, (௧௩)

அன்னப்பட்சித் தண்ணீரைப் பிரித்துப்பாலே யருந்து
  மறிவுடையோ ரறிவிலரை நீங்கிதனித் திருப்பர்
சின்னகுண மலிந்தவர்கட் சிறந்தநடை நடக்கார்
  தீயிலண் டியபொருட்.க ணசிக்குமது பிழைக்கா
பொன்னுக்கோர் மாற்றமிலே பொய்யிற்சத்தியந் தழையா
  போஜனப் பிரியனுக ஞானமற்றிங் குழைத்தாய்
நன்மைதர நந்திமிசை வருகுங் கபாலீசன்
  நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௪)

தவஞ்செய்வா ரவஞ்செய்யார் சார்ந்தநிலைப் பிரியார்
  சாந்தமென்ற கன்னியுடன் வாழ்ந்துசுகித் திருப்பார்
புவனமெலாம் பணிசெய்துப் போற்றும்வரம் பெறுவார்
  புகழிகழ்ச்சி சுகதுக்கப் பொய்மெய்யென்றும் வேண்டார்

* இழுக்கு - என்பது இளுக்கென மருவியது.

சிவவடிவே யெவ்வுயிரு மெனநினைந்து களிப்பார்
திருஷ்டி தன்னிற் கிடைத்ததையே பொசிப்பார்பேத முரைக்கார்
நவமனுக நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௫)

புண்ணியமே யோருருவாய்ப் பொருந்திநன்மைப் பெருகி
பொய்த்தேக மழிந்திடினும் புகழ்தேகத்தை யடைந்து
எண்ணிலா மகத்துவமு ஞானப்பிர காசமுட
னேகாந்த புத்தியுட னெத்தொழிலுஞ் செய்து
கண்ணினைக் காப்பதைப்போல பக்தியுடன் குருபால்
கார்த்திருந்தார் முத்தரானார் கருதா தானுக் குழைத்தாய்
நண்ணும்படி நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௬)

சாத்திரத்தைப் படித்தோமென்று க்ஷாத்திரியம் பேசார்த்
தன்னைப்போல் மன்னுயிரு முள்ளதென மதிப்பார்
கோத்திரமுங் குலமுண்டெனக் கூறிவீணிற் சீறார்
குணமுள்ளசத் கருமமதை மறக்கார்பொய்யிற் சிறக்கார்
மாத்திரைப்போ தேனுஞ்சத்தியம் வழுவார்நன்மை விலகார்
மரணமதை நினையார்முத்த ரிதையுணரா துழைத்தாய்
நாத்திகமில் நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௭)

சகலநலம் பொலமுமுன்செய் தவம்போலவந் தணுகித்
தருவதனு பவமாகநிற் பதற்கேன்வேறு சாட்சியம்
புகல்வதைப்போ னடப்பதுவு முடிப்ப தருமையெனப்
புனிதர்கள் முற்போழ்தே யெழுதிவைத்து மறைந்தார்
அகம்பிரம பாவனையற் றந்தரங்க சேவை
யதைப்புரியா தையகோவூன் வேண்டிசதா வுழைத்தாய்
நகநகென நந்திமிசை வருகுங் கபாலீசன்
நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (௧௮)

எல்லவரு நல்லவர்தா னெவ்வுயிர்க்கு மீச
னிறைவனல்லால் வேறுளதோ? யிதற்குயென்ன மறுப்புச்
சொல்லவல்லா ரிம்மையிலு மம்மையிலு மிலையே
சோங்கேறிப் பேசுகின்ற வாய்ஞானமென் செய்யும்
கல்லெல்லா மாணிக்கமோ யெனஅருண கிரியார்
கணித்ததிருப் புகழ்படித்துந் திண்டிவேண்டி யுழைத்தாய்

நல்லதுசெய் நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (கக)

காரண காரியங்கடந்து கரணமலை யொருபாற்
 கட்டாக நின்றுதவங் கைவரவே பத்தி
பூரணனந் தோதயமாய் விளங்க முத்தராகும்
 புண்ணியத்தை யடைந்தவரே தேவர்களிற் சிறந்தோர்
சீரணுகு மூலகமெலாஞ் சேவைசெய்து மகிழுஞ்
 சித்தியுண்டு யிதையகன்று பேரசனத்திற் குழைத்தாய்
காரணனு நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ள)

தவப்பிரகாச சமயாச் சாரியர்நால்வர்கள் வகுத்த
 சைவநெறி சிவசின்னங்க டனைமறவா தேத்தி
அவப்பிரகாச மலைகிமையி லழிந்துவிடு மவைபா
 லனுபவிக்குஞ் சுகமொன்றிலை அருட்கவி கங்காதர
சிவப்பிரகாச தேசிகன்சொல் நூலுடன் நூற்றேன்றுக
 செப்பியநற் சதகந்தனைப் படித்துதவ முடித்து
தவப்பிரகாச நந்திமிசை வருகுங் கபாலீசன்
 நடனபதங் கிடைப்பதற்கெந் நாளுந்தொழு மனனே. (ஈக)

இதுவுமது.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். பண் - இந்தளம்.

உற்றதைச் சொன்னு லற்றதுப் பொருந்து மெனவுரைத்தனர் முன்னோர்
மற்றுப்பற் றுகளெல்லாம் வீணெனவகுத்து வசனித்தே னிதையுணரக்
கற்றிலா தென்கொல்? காலமாங் காலன் கவர்ந்துனைக் கொளுமுனமே
விற்பனர் தொழும் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே. (க)

சத்துள்ள வரையினுந் தாண்டவமாடித் தனதெனப் பொருளையெலாம்
மெத்தவுநம்பியே வீணாள் கழித்தந்தோ? மெலிந்துட னலிந்தனையே
சுத்த சித்தமதாய்த் தொண்டர்முன் சொன்னத் தோத்திர மதைப்பாடி
வித்தகர்ப் பரவும் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே. (உ)

அள்ளி வெண்ணீ றணியும் புண்ணியமும் ஹரஓம் சிவயநமவென்
றுள்ள மலர மானதப் பூசைச்செய் தண்மையும் வண்மைப்பெற்று
கள்ளச் செய்கைக ளற்று மயங்கிடுங் கரண பூத மொன்றுகி
விள்ளு நெறியால் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே. (ங)

மதிநிதிப் பதியாய் மன்னும் பரமனை வணங்கினோர் சுகமடைந்தார்
சதிசெய்மூ வாசைப் பகட்டினால் மலைத்து சாகவோ வுடலெடுத்தாய்
அதிக விதரண முனமுன்னோ ருரைத்த ஆசித்த சிற்பரனும்
விதிதவிர்த் தாளும் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே.(௪)

பன்னிருத் திருமுறைப் பதிகத்தி லொருசொற் படித்ததன் பொருளறிந்து
மன்னும் பக்தியுடன் தினம்பாடி வணங்கும் வரமதைப் பெற்றனித்தியப்
புன் செயல்களற் றேசிவ ஞானம் பொருந்தியே வருந்திசந்திரன்
மின்னுஞ் சடையுடை ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே(௫)

கண்டதுங் கேட்டதுஞ் சொன்னது முடிந்ததுங் காலத்தின் கோலமென்
பண்டைநாள் விழைந்த வினையுள தெனினும் பறந்திடும் பக்தியினால்[னே
தொண்டர்கள்தொண்டுக் காசித்தபிரான் றுணைசெய்வார் சத்தியமன்றோ
விண்டிடநலந்தரும் ஸ்ரீகபாலீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே.(௬)

எத்தனை விதமாக வெடுத்தெடுத் துரைத்தாலு மெள்ளளவேனு மிதங்காய்
சத்துரு வாக யெனைநினைக் தனையோ சாக்காட்டை வெல்லுவையோ ?
முத்த னாகாமற் பிறவி நீங்கிடுமோ முழுதுங்கர்றன மெனுஞ்சொல்
மித்தையாய் முடியுமுன் ஸ்ரீகபாலீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே( )

சகல வாகமத்தின் பொருட்படி யாவுஞ் சங்காரத் தொழிலுடைய
பகவனும் பரசிவப் பிரபுவி னுருவாய்ப் பணித்துண்மைக் கணித்ததிலை
அகத்துணர்ந் தேத்தி யவனடிக் காளா யாகுதலெச் சமயமென
மிகவெண்ணி பூசித்து ஸ்ரீகபாலீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே.

தாயுந் தந்தைச்சுற்றம் மனைவிமக்கள் மித்திரர் தனகன சிறப்பனைத்தும்
மாயமாய்ப் பறக்கக் கண்முனங் கண்டும் மதிசற்றும் வரவில்லையே?
ஞாயமாய்ப் பலவாக வுரைத்தினுங் கேட்கிலை நமனவ னுயிரதனை
மேயவந் திடுமுன்னம் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே.(௯)

மெய்ச்சொலி விளங்கான் பொய்ச்சொலி விளங்க விற்பன முண்டுகொ
செய்தவ மழிந்தாற் கைதவமாருமெனுந் திருமொழிகற்றென்பலன்[லோ
தெய்வத்தைமறக்கின்தெய்வமேகெடுப்பதாய்ச் செப்புஞ்சீர்மறந்தனையே
வெய்யக் கண்ணுடைய ஸ்ரீகபாலீசன்றாள் வேண்டிவாழ்குவைமனனே.

சூடுண்ட மாடு துள்ள லாபாசஞ் சொல்லவுங் கேட்ப தெங்ஙன்
ஆடுவ தெல்லாம் நரம்பற்றால் முடியா தாண்மையின் வலியவையே
கேடுவருமுன்னேமதிகெடுமெனமுன்னோர்க் கிளர்த்தினருணர்ந்துமுத்தி
வீடுதந் திடும்பரன் ஸ்ரீகபா லீசன்றாள் வேண்டிவாழ்குவை மனனே. (௰)

ஆவியுங் காய மழித்தாலும் பாவிப்பே ரப்பப்பா வேண்டாமெனத்
தேவரின் கணமா யவதரித்த நல்லோர் செப்பியதைத் தெரிந்துங்குரு
சேவையுஞ் செய்திலைத் தீமையும் விட்டிலை சிந்தித்து தனித்திலையே
மேவருஞ் சுகந்தரும் ஸ்ரீகபா லீசன்றள் வேண்டிவாழ் குவைமனனே.

உள்ள தென்றைக்கும் போகா தெனச்சொலி வூரெலாம் வாய்ப்பறையா
லெள்ளா துரைத்து களிப்புற் றனையல்லா லெவ்வகைத் தனிற்சிறந்தாய்
தள்ளுவா ரொருநாட் பள்ளத்தில் மண்ணுட் சமாதியென் றுயர்வுகொள
வெள்ளை மதிநிலவும் ஸ்ரீகபா லீசன்றள் வேண்டிவாழ் குவைமனனே.()

மானிட சனனம் வருதலே யரிததில் மகிமைசேர் சைவமதிற்
றூனுமே வருதலும் பக்தி யாசாரஞ் சாந்தஞ்சற் குருநெறி கொண்
டோனவனுதலு மரிதெனி லிதற்குமுன் னோன்றுத லுளதோதிரு
மேனியாம் நீறுடை ஸ்ரீகபா லீசன்றள் வேண்டிவாழ் குவைமனனே.()

கடிகமழ் மலரெனக் கமழும்பொய் களையோர் காசுக்கும் வாங்குவோரியார்
படிமிசை யுள்ளதை மறைக்காது சொன்னால் பாம்பெனப் படமெடுத்து
துடிதுடித் தெழுந்து வலத்காரம் பேசித் துன்பஞ்செய் குணநீக்கி
மிடியதை யகற்றியாள் ஸ்ரீகபா லீசன்றன் வேண்டிவாழ் குவைமனனே.

செல்வத்துட் செல்வ மழியாதச் செல்வஞ் சிவஞானச் செல்வம்பெற்ற
நல்லவர் முன்ன மெவ்வித மாய்கையு நடைப்பெறு தொழிந்திடுங்காண்
புல்லுக்குங்கல்லுக்குஞ்சோல்லுக்கும்வில்லுக்கும்புகிதமளித்திலையோ
வில்வத்தா லர்ச்சித்து ஸ்ரீகபா லீசன்றள் வேண்டிவாழ் குவைமனனே.

வயப்பட்டு ஞான மதியதிற் குலவி மன்னும்பே ரின்பநிலை
நயமுட னடைந்தால் வந்தயிப் பிறவி நலம்பெறு மெனக்கருதி
அயலெனக் கைவிடா தெத்தனைப் போதித்து மையகோ ? எண்ணிலையே
வியர்த்த மாக்காது ஸ்ரீகபா லீசன்றள் வேண்டிவாழ் குவைமனனே (௰௭)

உன்னைப்போ லரியத் தோழமை யுடையவ ரொருவரியார் வையகத்தில்
என்சொலை யுணர்ந்து யிணங்கி பொள்ளலைவிட் டேறம் வழியடைந்து
